

அமரர்.

# திரு. கதிராமப்போடி மாணிக்கப்போடி

(முன்னாள் வட்டைவிதானை) )

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

08.06.2012



அமரர்.

# கதிராமப்போடி மாணிக்கப்போடி

(முன்னாள் வட்டைவிதானை)

பிறப்பு 1929.04.05

இறப்பு 2012.05.07

## திதி வெண்பா

அரசடித் தீவு தன்னில் அருள் பெற வாழ்ந்த
கதிர்காமப்போடி மாணிக்கப்போடி - சீர்பெறவே
சிறந்த நந்தனவருடம் சித்திரைத்திங்கள்
அபரபட்ஷ அனுஷமும் பிரதமையும் இயைந்ததிதியில்
இறையடி சேர்ந்தார்

# சமர்ப்பணம்

எமது குடும்பத்தின் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் உறுதுணையாக இருந்து அன்போடும் பண்போடும் நல்லகட்டுப்பாடு ஒழுக்கத்தோடு எம்மைப் பேணிக்காத்து நல்லறிவூட்டி சமயத்திற்கும் சமூகத்திற்கும் தொண்டுகளைப் புரிந்து எம் உள்ளத்தில் அணையா தீபமாய் ஒளி வீசும் எம் தெய்வமே உம் நினைவால் இம் மலரை உம் பாதகமலங்களுக்கு எம் கண்ணீர் புஸ்பங்களுடன் காணிக்கையாக்குகின்றோம்.

உனதருமை
மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார் உறவினர்கள்,
நண்பர்கள்.

# தோத்திரப் பாடல்கள்



## விநாயகர் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்திநிளம் பிறை போலுமெயிற்றனை
நந்தி மகின்தனை ஞானக்கொழுந்தினை புந்தியில்
வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

வேதமோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி
பூதம் சூழ பொலிய வருவார் புலியினுரிதோலர்
நாதா எனவும் நக்கா எனவும் நம்பா எனனின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார் பழனநகராரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புனையனேன் தனக்குச்
செம்மையே யாய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரவென் கண்குளிர்ந் தனவே.



## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல்லாம் விளங்க
அன்னநடை மடவாளுமை கோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தர்க்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்பஅன்பு வேண்டிப் பின்வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புன்டேன் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா! நீ ஆடும்போது உன் அடியின் கீழ் இருக்க என்றார்


## திருப்புகழ்

இருந்த வீடும் கொஞ்சிய சிறுவரும் உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரு மிளமையும் வளமேவும்
விரிந்த காடும் குன்றமு நிலையென மகிழாதே
விளங்கு தீபங்கொண்டுனை வழிபட அருள்வாயே
குருந்திலேறும் கொண்டலின் வடிவினன் மருகோனே
குரங்குலாவுங் குன்றுறை குறமகள் மணவாளா
திருந்தவேதம் தண்டமிழ் தெரிந்த புலவோனே
சிவந்த காலும் தண்டையு மழகிய பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்.

திருச்சிற்றம்பலம்



# அமரர் கதிராமப்போடி மாணிக்கப்போடி அவர்களின் வாழ்க்கை பதிவுகளில் சில வரிகள்

**பிறப்பு:**

ஈழத்திருநாட்டின் கிழக்கே மீன்பாடும் தேனாடு என பலரும் சிறப்பாக குறிப்பிடப்படும் மட்டக்களப்புக்கு தென் மேற்கே அமைந்துள்ள பழம் பெரும் பதியாம் பண்டாரியாவெளி என்னும் கிராமத்தில் காலம் சென்ற கதிராமப்போடி செம்பிப்பிள்ளை தம்பதியினருக்கு மூன்றாவது புத்திரராக ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி ஒன்பதாம் வருடம் சித்திரைத்திங்கள் 5ம் நாள் இப் புவியில் அவதரித்தார்.

இவருடைய உடன் பிறந்த சகோதரர்கள் நால்வர்.இந்த நால்வரும் ஆண் சகோதரர்கள் என்பதால் பெண் சகோதரர் இல்லை என்பது இவர்களுடைய குடும்பத்திற்கு பெரும் குறையாகவே இருந்துள்ளது.ஆண் சகோதரர்களில் மூத்த சகோதரர் இப்பிரதேசத்தில் மட்டுமல்லாது ஏனைய பிரதேசங்களிலும் சாஸ்திர கலைகளில் பிரபல்யம் பெற்ற தம்பிப்போடி சாஸ்திரியார் ஆவார்.இவர் தற்போது மகிழடித்தீவில் தனது மகள் இல்லத்தில் இருந்து தனது சேவையை தொடர்ந்து கொண்டிருக்கின்றார்.இரண்டாவது சகோதரர் சதாசிவக்குருக்கள் என்று அழைக்கப்படும் காலஞ்சென்ற கந்தப்போடி என்பவராவார்.இவரது இளைய சகோதரர்களில் ஒருவரான சிவசம்பு என்பவர்.இவர் மகிழடித்தீவு கிராமத்தில் திருமணம் செய்து வாழ்ந்து இறைவனடி சேர்ந்து விட்டார்.அடுத்த இளைய சகோதரர் முத்துலிங்கம் என்று அழைக்கப்படும் ஐயாத்துரை.இவர் அரசடித்தீவு கிராமத்தில் தன் மகளுடன் தற்போது வசித்து வருகின்றார்.

**இளமைப்பருவம்:**

இவர் சிறு வயதில் இருக்கும்போதே இவருடைய தந்தையார் இறைவனடி சேர்ந்துவிட்டார். இது இவரது சிறுவயதில் பெரும் கவலையை ஏற்படுத்தி இருக்கும் என்பதை உணரமுடியும் இருந்தபோதிலும் இவரது தாயின் உடன் பிறந்த ஆறு பெண் சகோதரர்களாலும்,இரண்டு ஆண் சகோதரர்களாலும் கிடைத்த அரவணைப்பு இவருக்கு தந்தையின் இழப்பில் ஏற்பட்ட கவலையை ஓரளவேனும் ஈடுசெய்திருக்கும் என்றே கூறலாம்.ஏனெனில் அப்போது அவர்களுக்கிடையே இருந்து உறவுப் பிணைப்பும், அவர்களுக்கிடையே இருந்த பற்று பாச உணர்வும், எல்லோரும் ஒரே குடும்ப உறவுகள் என்னும் மனநிலையும்,இதற்கு சான்றாகக் கொள்ளலாம்.இந்நிலையில் இவருடைய

இளமைக்கல்வியும் சிறப்பாக அமைந்திருந்தது என்றே கூறலாம்.

ஐந்தாம் வகுப்பு வரை பாடசாலை கல்வியை பண்டாரியாவெளி பாடசாலையில் தொடர்ந்திருக்கிறார். ஒரு சில வருடம் மாத்திரம் பாடசாலை கல்வியை தொடர்ந்தாலும் பிற்காலத்தில் அவருடைய செயற்பாடுகளை நோக்கும் போது குறிப்பிட்ட காலம் சிறப்பாக கல்வியை கற்றிருந்தார் என்றே கூறவேண்டும் மேலும் அவரது சகோதரர்கள், உடன் பிறவாதசகோதரர்கள், மாமாமார் வழிகாட்டல் மூலம் விவசாயத்துறையில் பல அனுபவங்களையும் தேர்ச்சிகளை யும் பெற்ற ஒருவராக காணப்பட்டார். விவசாயத்தோட்டம், வேளாண்மை என்பவற்றை இளமைக்கால தொழிலாக மேற்கொண்டு தனது உழைப்பால் குடும்பத்திற்கு வருமானத்தை பெற்று கொடுத்ததுடன் தனது உறவுகளுக்கும் கிடைக்கும் பொருட்களை ஈர்ந்தளிப்பதன் மூலம் உறவுகளின் மனதை கவர்ந்து கொண்ட ஒருவராக காணப்பட்டார்.

**இல்லற வாழ்க்கை:**

இவர் இளவயதிலே தந்தையை இழந்ததால் இவரை வழிப்படுத்தியதில் பெரும் பங்கு இவரது மாமாமாரையே சார்ந்திருந்தது. அந்த வகையில் இவரது மாமாவான மயிலிப்போடி விதானையார் என்பவர் தான் மணம் முடித்திருந்த கிராமமான அரசடித்தீவில் தனது மனைவி மூலம் ஏற்பட்ட உறவுக்காரரான தனது வீட்டிற்கு அண்மையில் வாழ்ந்து கொண்டிருந்த சத்துருக்கப்போடி பொன்னம்மா தம்பதியினரின் மூத்தமகளாகிய சௌபாக்கியம் என்பவருக்கு மணம் முடித்து கொடுப்பதற்கு இரு குடும்பத்தினரும் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் 10.08.1951அன்று சகல உறவினர்களும் புடைசூழ இருவருக்குமான திருமணம் நடந்தேறியது.

**மக்கள் பிறப்பு:**

இவரது பண்பான இல்வாழ்க்கையின் பயனாக இவருக்கு நான்கு ஆண் பிள்ளைகளையும் ஒரு பெண் பிள்ளையையும் பெற்றெடுத்தார். தனது பிள்ளைகளின் எதிர்காலம் சிறப்பாக இருக்கவேண்டும் என்னும் நோக்குடன் பிள்ளைகளை எல்லாத்துறைகளிலும் உட்படுத்தி நல்ல பழக்கவழக்கங்களை கொண்ட ஒழுக்க சீலர்களாக இருக்க வேண்டும் என கஸ்ரப்பட்டு உழைத்தார். அவரது முயற்சி ஓரளவு வீண்போகவில்லை. அவரது பிள்ளைகள் நல்லபழக்க வழக்க பண்புகளைக் கொண்ட ஒழுக்க சீலர்களாக சமூகம் மதிக்கக்கூடிய அளவிற்கு வாழ்ந்து கொண்டிருப்பதை எடுத்துக்காட்டாக கொள்ளலாம். இவர்களுள் மூத்தமகன் புவனசிங்கம். இவர் மகேஸ்வரியை மணம் செய்து பண்டாரியாவெளி கிராமத்திலே வாழ்ந்து வருகிறார். இரண்டாவது மகன்

பாலசுந்தரம்.இவர் சறோசாதேவியை மணம் செய்து அரசடித்தீவிலே வாழ்ந்து வருகிறார்.மூன்றாவது மகன் பராமானந்தம்.இவர் ம.தே.மே.ப.கூ. சங்கத்தில் பணி புரிந்து தற்போது மட்டக்களப்பு கரையோரப்பாதுகாப்பு திணைக்களத்தில் பணிபுரிந்து கொண்டு இருக்கிறார்.இவர் அமிர்தமலரை மணம் செய்து தற்போது கல்லடியிலே வாழ்ந்து வருகின்றார்.நான்காவது மகன் வல்லிபுரம் இவர் தங்கமலரை மணம் செய்து பண்டாரியாவெளி கிராமத்தில் வாழ்ந்து வருகின்றார்.ஐந்தாவது மகள் மகேஸ்வரி.இவர் மேகராஜா என்பவரை மணம் செய்து அரசடித்தீவு கிராமத்தில் வாழ்ந்து வருகின்றார்.

**சமூகப்பணி:**

தமது குடும்பப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றிக்கொண்டிருக்கும்போது தாம் வாழ்ந்த சமூகத்தின்மீது அக்கறை கொண்ட ஒருவராகவும் திகழ்ந்திருக்கிறார். அவர் இளமையில் இருந்தே விவசாயத்தில் திறமை காட்டியதனால் பல அனுபவங்களை பெற்றதனாலும் விவசாய சமூகத்தினால் வட்டவிதானை என்னும் பொறுப்பு வழங்கப்பட்டது. இப் பொறுப்பு இந்த சமூகத்திற்கு சேவை செய்வதற்கு கிடைத்த வாய்ப்பாக கருதி அப்பணியை நேரம் காலம் பார்க்காது சிறப்பாக மேற்கொண்டார்.இதன் மூலம் இன்றும் பலரது மனதில் இடம் பிடித்த ஒருவராக காணப்படுகின்றார். மேலும் தான் கற்ற சித்த வைத்திய மாந்திரீக அறிவின் ஊடாக தான் வாழ்ந்து கொண்டிருந்த சமூகத்தில் நோயினால் பாதிக்கப்பட்ட சிலரது சிலவியாதிகளை குணப்படுத்தி அவர்களுக்கு ஆறுதலளித்த ஒருவராக திகழ்ந்திருக்கின்றார். ஆங்கில வைத்தியம் அருகி இருந்த காலப்பகுதியில் இப்படிப்பட்ட கிராமவைத்தியர்களின் சேவை மிகப்பெரிய பணியாக மதிக்கப்பட்டது. இதன் மூலம் தன்னலம் கருதாது சமூகத்திற்கு சேவை செய்த ஒருவராக வாழ்ந்திருக்கிறார்.

**சமயப்பணி:**

மேலும் பலவாறு சமூகப்பணிகளை மேற்கொண்டிருந்த அதே வேளை சமயப்பணிகளிலும் தன்னை அர்ப்பணித்த ஒருவராக காணப்பட்டார். இவர் ஒரு சிறந்த பக்திமான். கடவுள் மீது அதீத நம்பிக்கை கொண்டவர். எச்செயலையும் கடவுளை முன்நிறுத்தியே செய்வார் எல்லாம் அவன் செயல்" என்ற கருத்தின் ஊடாக ஆன்மீக கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஒருவராக காணப்பட்டார். தனது ஓய்வு நேரங்களில் ஆலயத்திற்கு செல்வது,ஆலயத்தில் இடம்பெறும் விசேட நிகழ்வுகளில் கலந்து கொண்டு திருமுறைகளை ஓதுவது, விரதகாலங்களின் போது திருப்பாடல்களை ஓதுவது போன்ற பணிகளை நிறைவேற்றுவதன் மூலம் சமயப்பணிகளை சிறப்பாக நிறைவேற்றிய ஒருவராக காணப்பட்டார்.

**பிற்கால வாழ்க்கை:**

தனது பிள்ளைகளை வளர்த்து நிமிர்த்தி ஆளாக்கி திருமணம் முடித்து கொடுத்து குடும்பத்தின் கடமைகளை நிறைவேற்றிய போதும் மேலும் எல்லாக் குடும்பங்களின் நலனிலும் அக்கறை கொண்ட ஒருவராக அவர்களின் வீடுகள் நாடிச்சென்று அன்புகளை பரிமாறி அவர்களுக்கு புத்திமதிகளைக் கூறி அவர்களை வழிப்படுத்தும் ஒருவராக வாழ்ந்தார்.

அதேபோன்று சமூகத்திற்கும் தன்னை நேசித்த மக்களுக்கும் தன்னால் இயன்ற உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நல்கும் ஒருவராக தன் உடல் களைப்படைந்த காலத்திலும் அமைதியாக ஒரு இடத்திலே (காலைவளவு) இருந்து கொண்டு அவரிடம் நாடிவந்த அனைவருக்கும் தனது பாணியிலே அரவணைத்து உபசரித்த பண்பாளனாகவே வாழ்ந்தார். அக்காலத்திலும் தனது ஓய்வு நேரங்களை ஆலயத்திலும் கழித்து அறப்பணிகளிலும் ஆலயத் தொண்டுகளிலும் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

**இறுதி நாட்கள்:**

இவ்வாறு இம் மண்ணுலக வாழ்க்கையை சிறப்பாகவும் பண்பாகவும் பிறப்பின்நோக்கம் கருதியும் வாழ்ந்து கொண்டிருந்த இவர் தனது 82வது வயதில் நோய்வாய்பட்டவராக இயல்பு நிலை மாற்றமடைந்தவராக தனது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,உறவினர்கள் அரவணைப்பு மூலமாக இறுதி காலத்தில் நிம்மதியான வாழ்வை தழுவினார். இவ்வாறு பலரதும் அரவணைப்பிலும், ஆறுதல் வார்த்தைகளிலும் கவரப்பட்டுக்கொண்டு காலங்கழித்து கொண்டிருக்கும் வேளை 07.05.2012 அன்று மாலை 07.30மணியளவில் தான் ஆழ்ந்த சயனத்தில் இருப்பது போன்று தனது 83வயதில் மீளாத்துயில் கொண்டு இறைவனடி ஏய்தினார்.

அன்னாரின் ஆத்மா சாந்தி பெற்று எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதகமலங்களின் அடியில் சகல அனுக்கிரகங்களும் பெற பிராத்திப்போமாக

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# மங்காத மாணிக்கம்

மண்முனை தென்மேற்கின் பண்டாரியாவெளியின் கண் பண்பாளர் கதிராமப்போடி செம்பிப்பிள்ளை பெற்ற பேறின் தவப்பயனால் மண்ணில் நல்ல மைந்தனாக 05.04.1929 அன்று கதிராமப்போடி மணிக்கப்போடி அவர்கள் வந்துதித்தார் மறவர் மண்பெற்றெடுத்த மைந்தர் மாணிக்கப்போடி அவர்கள் குலம் செழிக்க சகோதரர்களுடன் வாழ்ந்து வந்தார். அன்னார் இளமைப்பருவத்தில் துடுக்கான செயற்பாடு உடையவராக இருந்தார். என்பதை என்னை ஆளாக்கியவர்கள் கூறுவார்கள் இல்லறம் என்ற நல்லறத்தில் இணைவதற்காக அண்மைக்கிராமமான அரசடித்தீவில் பாக்கியவதியான சௌபாக்கியம் அவர்களை கரம்பற்றி தனது குடும்பப்பாதையை கடைப்பிடித்த மங்காத மாணிக்கம் அவர்.

மனிதனாக வாழக்கிடைப்பதே அரிது அதனிலும் அரிது கூன்குருடு செவிடு நீங்கிப்பிறத்தல் என ஔவையார் கூறுகின்றார் அவ்வாறு அரியபிறப்பெடுத்த மங்காத மாணிக்கம் அவர்கள் குலம் தழைக்க கோடி புண்ணியம் செய்தவர் அதன் பயனால் ஐந்து பிள்ளைகளுக்கு அன்புத்தந்தையானார் அதுவும் அவர்செய்த பாக்கியமே பெற்றால் போதுமோ அவர்களை நல்லவராக்கி விடவேண்டிய கடமையும் அவர்களுக்கிருக்கின் றதல்லவா? அதற்கு இலக்கணமாகவாழ்ந்து காட்டிய மாமனிதன் அமரர் மாணிக்கப்போடி அவர்கள் எமது மண்ணில் பிரதான ஜீவனோபாய தொழிலான கமத்தொழிலை கற்றுத் தேர்ந்தார் அதன்பயனாக பிள்ளைகளை கஸ்ரம் அறியாது வளர்த்தெடுத்த பெருமகனானார் பண்டாரியாவெளி கிராமம் இறைவழிபாட்டு மந்திரங்களுடனும் சாஸ்திரங்களுடனும் பின்னிப் பிணைந்திருந்தது அந்த வாசனையை இந்த அமரர் மாணிக்கத்திலும் நுகரக்கூடியதாக இருந்தது எமது பிரதான தொழிலான கமத்தொழிலில் ஈடுபடும்போது இற்றைக்கு முந்திய காலங்களில் விச ஜந்துக்களால் தீண்டப்படும் சந்தர்ப்பங்கள் அதிகமாக இருந்திருக்கின்றது அச்சந்தர்ப்பத்தில் எல்லாம் என்ன பாம்பு கடித்திருக்கின்றது.

விஷமாக இருக்குமா? இல்லை என்பதை "தூதன் குறி" மூலம் கணிப்பிட்டு கூறுவதில் வல்லவராக இருந்தார் என்பது இப்பிரதேச மக்கள் அறிவார்கள். நானும் சிறியவனாக இருக்கும் போது இரவு நேரத்தில் எனது உறவினர் ஒருவருக்கு விசப்பூச்சி கடித்தபோது அண்ணன் அமரர்-மாணிக்கப்போடி அவர்களிடம் சென்று கூறிய போது அதைக்கணிப்பிட்டு

துண்ணியமாக அது விசமில்லை நீங்கள் யோசிக்க தேவையில்லை என்றுஅவர் கூறிய வார்த்தை இன்றும் என்னிடம் நிழலாடும் ஞாபகமாக இருக்கிறது அந்த நேரத்திலே இரண்டு மாணிக்கப்போடியாளர்கள் இருந்தார்கள் ஒன்று அமரர்-வைத்தியர் மாணிக்கப்போடியார் அவர்கள் மற்றயது இந்த பெருமகனார் மங்காத மாணிக்கப்போடி அவர்கள். இவர் தூதன்குறி சொல்ல வைத்தியர் விஷக்கடிக்கு வைத்தியம் செய்வார். இதனால் இவர்கள் செய்வதற்கு அடுத்த ஸ்தானத்தில் வைத்து நோக்கப்பட்டார்கள்

தலைகுனிந்து நடப்பதெல்லாம் தலைநிமிர்ந்து வாழ்வதற்கே என என்னை கற்பித்த ஆசிரிய ஆசிரியை சொல்லியிருக்கிறார்கள் அதனை நான் அமரர்- மாணிக்கப்போடி அவர்களின் வாழ்க்கையில் கண்டிருக்கிறேன் அமரர் அவர்கள் அரசடித்தீவு ஆலயத்திற்கு அண்மையில் ஒரு வளவில் ஒரு கட்டடம் அமைத்திருந்தார். தினமும் அங்கு சென்று வருவதற்கு எங்கள் வீட்டுக்கு முன்னால் உள்ள ஒரு தெரு வழியே சென்று வருவது வழக்கம் யாரையேனும் கண்டால் பணிவோடு உறவுமுறை சொல்லி வாயாலும் மனதாலும் மரியாதை கொடுத்து செல்லுகின்ற காட்சி இப்பவும் எனது ஞாபகத்திற்கு வருகிறது. அது மாத்திரமல்ல தனது அந்த வளவில் உள்ள கட்டடத்தை நல்லமுறையாய் ஓய்வினை கழிக்கின்ற ஒரு இடமாக அன்னார் அவர்கள் பயன்படுத்தியதை இப்போது மீட்டுப்பார்க்கிறேன்

அமரர்- மாணிக்கப்போடி அவர்கள் அன்னாரின் வாழ்க்கை காலங்களிலே சமூகத்தோடும், சமயத்தோடும், தொழிலோடும் மற்றவர்களுடன் நல்ல நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தார். அதனால் அவர் வாழ்ந்த காலத்திலேயே தனக்கென ஒரு முகவரியை பதித்திருந்தார் அதனால் அவரது ஆன்மா பிரிந்து வெற்றுடல் மறைந்தாலும் அன்னாரின் சேவை மறையவில்லை செயல்கள் எம்மை விட்டுக்கலயவில்லை நினைவு முடியவில்லை, நிஜங்கள் மாறவில்லை, மொத்தத்தில் அன்னார் மங்காதமாணிக்கமானார்.

**த.சோமசுந்தரம்(அதிபர்)**
**புதுக்குடியிருப்பு.04**

# ஊருக்கு உகந்த ஊர்ப்போடியார்
# அமரர்-கதிராமப்போடி மாணிக்கப்போடி

படுவான் கரையின் பழம் பதியாம் பண்டாரியாவெளியில் அவதரித்து அழகூராம் அரசையூரில் சைபாகம் அம்மணியை கரம்பிடித்து இல்லற வாழ்வை இன்பமாக கழிக்கையில் ஐந்து பிள்ளைகளை பெற்றெடுத்து சிறப்பாக மற்றையோர் போற்ற வாழ்ந்த உத்தமர் ஐயா! மாணிக்கப்போடி அவர்கள்

இவர் தனது வாழ்நாளில் சமய பணி சமூகப்பணி என பொதுப்பணிகளில் முன்னின்று சமயங்களுக்கு முன்மாதிரியாக திகழ்ந்தவர் என்றால் மிகை ஆகாது. " சமயப்பணியே நற்பணி அதற்கு உன்னை அற்பணி என வாழ்ந்து காட்டிய வள்ளல், இவரது வாழ்வில் அதிக காலம் ஆலயப்பணியோடு தன்னை ஈடுபடுத்தியவர். இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக எமது ஆலயத்தில் இடம்பெறுகின்ற அனைத்து விரத காலங்களிலும் ஆலயத்திற்கு வந்து சமயகுரவர்களது பதிகத்தை பாடி பக்தர்களை இறைசிந்தனையில் ஈடுபடுத்தக்கூடிய வல்லமை ஐயா! அவர்களையே சாரும்.

சிறப்பாக விநாயகர் சதுர்த்தி விரத காலத்தில் ஏடு படிப்பதில் எமது ஆலயத்தில் இவருக்கு மிஞ்சியவரில்லை அமரர்- மாணிக்கப்போடி அவர்கள் தனது வாழ்வில் இல்லத்தில் தங்கியதை விட ஆலயத்தில் தங்கியிருந்த நாட்களே அதிகம் இதற்கு காரணம் ஆலயத்திற்கு அருகாமையில் தோட்டம் போட்டு அங்கேயே வாழ்க்கையை நடத்திவந்த சமூக சேவையாளன் இப்படியாக இறை பணிக்கு தன்னை அர்ப்பணித்தவர். அவரிடம் யார் போய் ஏது கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல் இன்முகத்துடன் வரவேற்கும் பண்பாளர்

இப்படியாக வாழ்ந்து வரும் வேளையில் நோய்வாய்ப்பட்டு சிறிது காலம் வாழ்ந்த ஐயா அவர்கள் " இறக்கல் போகும் போது இறக்கல் போன பேரின்பன் இவ்வாறாக வையர்கள் சொர்க்க லோகத்திலும் கூட இறைவன் அவர்களை தன்னோடு ஐக்கியப்படுத்தி கொள்வான் இதுவே உண்மை. " வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்".

**ஸ்ரீ விக்னேஸ்வரர் ஆலய பரிபாலன சபை**
**அரசடித்தீவு**
**பொருளாளர் (சி.வாலசேகரம்)**

# இறைவனடி சேர்ந்த ஆன்மீகப்பெரியார்

மவறா மிகுத்யுஞ்ஜய மந்திரம்

"ஓம் த்ரயம்பகம் யஜாமகேபற
ஸாகந்திம் புஸ்டிவர்த்தனம்
உர்வாருகமிவ பந்தனுத்
ம்ருத்யோர் முகஷீய மாம்ருதாத்"

பொருள்:- நறுமணம் மிகுந்தவரு எல்லா ஜீவன்களுக்கும் புஷ்டி அளிப்பவரும் முக்கண்ணனுமான சிவபெருமானைப் பூசிக்கின்றோம்.வெள்ளரி தன் கொடியில் இருந்து விடுவிக்கப்படுவது போல் அமரத்துவத்தின் பொருட்டு அன்னவ நம்மை மரணத்தில் நின்றும் விடுவிப்பாராக

இந்த மகா மிருத்யுஞ்ஜய மந்தரம் ஓர் உயிர் வழங்கும் மந்திரம் இம் மந்திரத்தை நம்பிக்கையோடு உச்சரித்தால் வியாதிகள் தீர்ந்து மரணத்தை வெல்லலாம்.

ஆன்மீகப்பணியிலும்,சமூகப்பணியிலும்,இல்லறப்பணியிலும் சிறந்து விளங்கிய ம.தே.மே பட்டிப்பளைபிரதேசத்தின் அரசடித்தீவு கிராமத்தில் வசித்து வந்த அமரர் கதிராமப்போடி மாணிக்கப்போடி அவர்கள் 7.05.2012ம் திகதி இறைவனடி சேர்ந்தார்.இவர் மிகவும் இறைசிந்தையுடையவர்.மனிதருள் தெய்வமாக இருந்து இல்லத்தை நல்லறமாக்கி வாழ்ந்துவந்தவர்.உயர் குடியில் பிறந்துவளர்ந்து பருவகாலத்தில் திருமணமும் செய்வதற்காக அரசடித்தீவைப் பிறபிடமாகக் கொண்ட ஒழுக்கம் பண்பாடுடைய உயர்குடும்பப் பெண்ணான சௌபாக்கியம் என்னும் பெண்மணியைத்திருமணம் செய்து இல்லறத்தை நல்லறமாக்கி வாழ்ந்து வந்தார்.

மக்களை ஈன்றெடுத்து உகந்தமுறையில் பயில்வித்து பல துறைகளிலும் ஆண் மக்கள் நால்வரையும் வல்லுனராக்கினார்.பெண்மகளுக்கு கல்வியில் வல்லுனராகவும் ஒழுக்கசீலமுடையவராகவும் தன்வம்சாவளி சாந்தவராகவு முடைய அதிபர் இ.மேகராசா(மணி)என்பவரைத்திருமணம் செய்துவைத்ததில் பெருமிதமடைந்தார்

பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும் இதுதான் தத்துவம் எது நடக்கிறது அது இறைவனின் செயல் மரணம் என்பது பலவழிகளிலும் தோன்றலாம். சிசுவிலும்வரலாம், இளைமைப்பருவத்திலும் வரலாம்.ஆனால் அமரர் மாணிக்கப்போடி பெரியாரினுடைய மரணம் மிகவும் பரிபூரணமான இறுதி வரையான சந்தோசமான மரணமாகும்.தன் மனதில் எந்தக் கவலைக்குமிடம்

வையாது வாழ் நாளை வீணாக்காது வாழ்ந்து காட்டியிருக்கின்றார்.இது முற்பிறப்பில் செய்த புண்ணியப் பேறாகும்

"வையத்து வாழ்வாங்கு வாழ்வார் வான்
உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

அந்தவகையில் இறைவனடி சேர்ந்த ஆன்மீகப் பெரியாராகிய உயர் திரு மாணிக்கப்போடி ஐயா அவர்கள் கடவுளை மனதாலும் நாவாலும் மெய்யாலும் வழிபாடுகள் ஆற்றி மக்கள் சமூதாயத்திற்கு ஆன்மீகப்பாதையை திறந்து வைத்தவராவார்.

கடவுளைப்பற்றி அறிதலும் அதை மக்களுக்கு புகுத்துவதுமாக,கடவுள் எல்லோருக்கும் சொந்தமென்றும் அவருக்கு நாங்கள் சொந்தம் என்றும் பல ஆன்மீகச் சிந்தனைகளை மக்களிடையே போதிப்பதில் மிகவும் வல்லுனராக இருந்தவர்.

அவர் பல கருத்துக்களைக்கூறுவார் இப்பொழுது ஒவ்வொரு ஆத்மாவிற்கும் உண்மையில் தேவை சக்திதான் பல பிறவிகளாக தேவையில்லாத குப்பைகளைச் சேர்த்துக் கொண்டுவந்த ஆத்மா இன்று சுமைகளுடன் கூடியதாகவும் சக்தி இழந்து வெறுமையாகவும் உள்ளது. அதனால் அதனது உயர்ந்த சக்தியின் அளவிற்கு செயற்படமுடியாமல் இருக்கின்றது. நமக்குள் இருக்கும் ஆற்றலை சரியான முறையில் பயன்படுத்தும் பொழுது நமக்கு சக்திகிடைக்கிறது.மற்றும் நாம் கடவுளுடன் இருந்து நமது லட்சியத்தையும் அடைய முடிகிறது.

மனதை சாதாரணமாக சிறுசிறு விடயங்களில் எல்லைக்குஅப்பாற்பட்ட சிந்தனையில் வீணடிக்கும் பொழுது ஆன்மீகப்பாதையை விட்டுவிலகிப் போகிறார்கள்.மற்றவர்களைக் குறைகூறுவதும்,பழி சொல்வதும்,வெறும் சாக்குப் போக்குமட்டுமே.இது இறந்தவரின் காரணமாக அதிகமான சக்தி வீணாகிப் போகிறது.அதனால் ஆத்மாவின் ஆற்றல் வெகுவாகக்குறைந்து போகிறது இவ்வாறு செயல்படக்கூடியநேரம் இப்பொழுது இல்லை. உங்களுக்கு சக்தி தேவை என்பதைப்புரிந்து கொண்டு அதை அதிகரித்துக் கொள்ளுங்கள் எவ்வளவு சக்தி பெருகுகின்றதோஅவ்வளவு அன்பும் பெருகும்.அது மாத்திரம் அல்ல தூய உணர்வும் வேண்டும்.மக்கள் தங்களது வாழ்கையில் அதிகமான ஏமாற்றங்களைச் செய்திருக்கின்றார்கள். பொய்யான விஷயங்களின் பரிமாற்றங்கள் ஏராளமாக ஏற்பட்டு விட்டன. அதனால் தூய உணர்வுகள் அழிந்துவிட்டன.இதனால் தான் சில பேர் தூய உணர்ச்சி வசப்படுவதை முழுவதுமாக விட்டு விட்டு உலகத்தையோ துறந்து விட்டார்கள்.ஆனால் ஆத்மா இறைவனிடம் ஏதாவது பெற ஆரம்பிக்கும் பொழுது இதயம் திறக்க ஆரம்பிக்கும்.

ஆகவே நாம் இறைவனின் அன்பைப் பெற்று தூய உணர்வுகள்

கொள்வோம். தூய்மையான உணர்வுகள் என்றால் என்ன என்பதை அனுபவம் செய்வோம். நம் பரஸ்பரநம்பிக்கை கொள்வோம்.மற்றும் நம்மிடமே நமக்கு நம்பிக்கை இருக்கட்டும்.நம்மை நாம் நேசிக்கக்கற்றுக் கொள்வோம்.நமது உணர்வுகளில் பரிசுத்தம் இருக்கட்டும்.பின் நாம் அன்பை அனுபவம் செய்ய முடியும்.நாம் கடவுளிடம் பெற்று மற்றவர்களுக்கு கொடுப்போம்.மற்றவர்களுகாக நம்மிடம் மிகவும் சக்திவாய்ந்த நல்ல எண்ணங்கள் இருக்கும் பொழுது மற்றவர்களுக்காக நல்ல உணர்வுகள் இருக்கும் பொழுது அந்த உணர்வு அவர்களைச் சேர்கின்றன.நமது நல்ல உணர்வுகளின் சக்தி மூலமாக நாம் ஒருவருக் கொருவர் உதவி செய்து கொள்ள முடியும்.எனது இதயத்தின் ஆழத்தில் இந்த ஒரே ஒரு உணர்வுதான் இருக்கிறது. எப்படி நான் கடவுளிடமிருந்து எவ்வளவு பெற்றிருக்கிறேனோ அதேபோல் இறைவனின் அனைத்துக் குழந்தைகளும் அவரிடம் இருந்து பெறட்டும் என்பதேயாகும்.

அவர் கூறிய ஆன்மீகப்பாதை என்னும் விடயத்தைப்பார்த்தால் ஆன்மீகப்பாதை என்பது கல்விக்கூடம் போல,ஆனால் ஆன்மீகக் கல்விக்கூடம் சாதாரண கலைகளைக்கற்கும் பள்ளி போல அல்ல.ஆனால் ஆத்மாவின் கலைகளை அறிந்து கொள்வதற்கான ஆன்மீகப் காலைக்கூடம் நமது நடத்தையில் இருக்கும் குறைகளை நீக்குதல்,மற்றும் உங்களைச் சுற்றியுள்ள எதிர்மறையான சூழலில் இருந்து காத்துகொள்ளுதல் போன்றவை அக்கல்வி தரும் கலைகளாகும்.

நாம் ஆன்மீகப்பாதையைக் கடைப்பிடித்தோம்.என்றால் நமது தனிப்பட்டதிறமைகளை வளர்த்துக் கொள்ளமுடியாது.என்று சிலர் எண்ணுகின்றனர்.ஆனால் ஜனங்களுக்கு தற்காலத்தில் எப்படிப்பட்ட திறமைகள் தேவை?ஒருவர் தமது அகங்காரத்தை முழுமையாக நீக்கிக் கொள்வாரேயானால் அதுவே மிகப் பெரியதிறமையாகும். பிற சிக்கலான விடயங்களைக் கற்பது அவசியமில்லை கடவுளைபின்பற்று சுபாவம் உங்களுடயதாக்கி உண்மையான வராகுங்கள். உங்களது ஆன்மீகக் கல்வி மூலம் உங்களது உண்மையான சுயரூபத்தை வெளிப்படுத்தி ஆன்மீகப்பட்டம் பெறுங்கள். இதுவே வாழ்வின் உன்னத வெற்றியாகும்

மேலும் அண்ணன் பணிவைப்பற்றி நன்கு எடுத்துக் கூறியுள்ளார்.நான் மற்றவர்களுக்கு என்னவெல்லலாம் உதவி செய்கின்றேனோ அதுக்கான சக்தி என்னிடம் இருந்து வருவதில்லை.ஆனால் அன்பின் சக்தியில் இருந்து வருகின்றது என்ற உணர்வு இருக்கும் பொழுது பணிவு வருகிறது.நீங்கள் பணிவாக இருந்தால் உங்கள் தலை மீது நடக்க ஆரம்பித்து விடுவீர்கள் என்பது உண்மையல்ல.பணிவு இல்லாமல் இருக்கும் பொழுதுதான் நீங்கள் சுலபமாக மத்தவர்களால் பாதிக்கப்படுவீர்கள்.மற்ற விஷயங்கள் கஷ்ட்டமாகி விடுகின்றன.

பணிவு இருக்கும் போது அங்கு சத்தியத்தின் சக்தியும் இருக்கிறது மற்றவர்கள் என்ன நினைத்தாலும் சரி என்ன கூறினாலும் சரி ஆனால் நீங்கள் உங்கள் லட்சியத்தை அடைந்து விடுவீர்கள் என்பது உள்ளூர உங்களுக்குத் தெரியும். பணிவுடைய ஒருவன் நான் மற்றவர்களுக்கு தலைவணங்குகிறேன் என்பது நினைக்க மாட்டான்.தலை மிகவும் உயர்ந்தும் இருப்பதில்லை தாழ்ந்தும் இருப்பதில்லை. ஒரு பரிஸ்தா (தேவதை) போல தலை நிமிர்ந்ததே இருக்கிறது. அவ்வளவே

பணிவு உங்களது சத்தியத்தை வெளிப்படுத்துகிறது. அகங்காரத்தினால் நீங்கள் மற்றவர்களை விமர்சிக்கிறீர்கள் மற்றும் வலையில் மாட்டிக் கொள்கிறீர்கள். பணிவு இருக்கும் பொழுது உணர்ந்து தெளியும் சக்தி இருக்கிறது அதன் காரணமாக நமக்குள் மாற்றம் ஏற்படுகிறது. ஆத்மி ஒருவிடையில் தன் தவறை உணர்ந்து விடுகிறது சரி என் தவறுதான் என்று சுலபமாக ஒரு சச்சையை முடித்து விட முடிகிறது. பணிவு நம் இதயத்தை நேர்மையானதாக, பரந்ததாக, தூய்மையானதாக ஆக்குகிறது. ஒழுங்கான சீரான ஒத்துழைப்புக்கு துணைசெய்கின்றது. பணிவின் மூலம் நீங்கள் மற்றவர்களினதும் உங்களதும் இதயத்தையும் வெற்றி கொள்ள முடியும். மீண்டும் மீண்டும் அன்பு நிலவ ஆரம்பிக்கும் என சிறந்த தத்துவக்கருத்துக்களை இறையடி சேர்ந்த ஆன்மீகப் பெரியார் எடுத்துக் கூறியுள்ளார். எனவே நாயநார்களைப் போன்று வாழ்ந்த அன்னாரின் ஆத்மா இறைவனடி சேர வேண்டும் என்றும் அன்னாரின் குடும்பத்தினருக்கும் என்றும் அருள் கிடைக்கவேண்டுமென்றும் இறைவனை வேண்டுகின்றேன்.

1. தன்வலம் அறிந்து அம்பல ஏறவேண்டும்
2. பொறுமையே பெருந்தன்மைக்கு அணிகலன்
3. மனிதன் பயனின்றி அழியவே கூடாது இது உனது மனதில் இருக்கட்டும்
4. ஆன்மீகச் செல்வம் மனிதனின் வதனத்தை பொலிவுறச் செய்கிறது (பேரின்பக்குறள்)
5. தங்கத்தைப் புடமிடுகிறது நெருப்பு மனிதனைப்புடமிடுகிறது துன்பம்
6. வாழ்வில் துன்பம் துயரங்களை இடைவிடாது அனுபவித்தாலும் உலகத்தாரின் மனம் பெண்ணாசை பொன்னாசைகளை வெறுத்து எளிதில் இறைவனிடம் திரும்பாது
7. மன ஆரோக்கியத்திற்குச் சிறந்த மருந்து மௌனத்தைத் தவிர வேறொன்றும்மில்லை
8. இறைவனை இடைவிடாது நினைத்துக் கொண்டிருப்பவனுக்கே அவரது இயல்பு என்ன என்பது தெரியும்.
9. செல்வமும் மக்களும் தெய்வத்தை மறக்கச் செய்யாதபடி காத்துக்கொள்

**ஆன்மீகத் தொண்டர்**
**ஞா.பேரின்பம்(துரையப்பா)**

# நல்வழி காட்டிய எனது மாமனார்

இவ்வையகத்தில் பிறப்பு உண்டெனில் இறப்பும் உண்டு.இந்த பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்டதே வாழ்க்கை. "வையத்துள் வாழ்வாங்குவாழ்பவன் வானுறையும் தெய்வத்துள்வைக்கப்படும்" "என்பதற்கிணங்க இவ்வுலகில் ஒவ்வொருவரும் வாழும் வாழ்க்கை அதன் நோக்கத்தை நிறைவேற்றக் கூடியவகையில் அறம் காத்தும் அனைவராலும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அன்பு பண்புசார் விழுமியங்களை கொண்டதாகவும் அமையும் போது வாழ்வாங்குவாழ்பவன் ஆகின்றனர். அந்தவகையில் அமரத்துவம் அடைந்த எமது மாமனார் அவர்கள் வாழ்கையை சிறப்பாக வாழ்ந்து அமரத்துவம் எய்திருக்கிறார்.

நான் அவரது மகளை திருமணம் செய்வதற்கு முன்பே அவர் எனது தாயின் வழி ஒன்று விட்ட மாமாவாவார்.அதன்படி மாமா என்னும் உறவு எனது பிறப்பிலிருந்து ஏற்பட்ட பந்தமாகும்.அந்தவகையில் எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரிய பெரும்தகையாக இருந்தார்.மேலும் அவரது மகள் மகேஸ்வரியை கரம் பிடித்ததன் பின் அப்பந்தம் இரட்டிப்படைய மாமாவாகவும் எனக்கு வழிகாட்டும் தந்தையாகவும் இருந்து எனக்கு வழிகாட்டினார்.சிறு வயதில் எனது தந்தையை பிரிந்த எனக்கு இவரது அன்பும் அரவணைப்பும் தந்தையை பிரிந்த ஏக்கத்தை ஓரளவு நிவர்த்தி செய்யக்கூடியதாக அமைந்தது.அன்புத் தந்தைபோலே அறிவுரைகள் எடுத்துரைத்து நன்னெறி காட்டினார்.

மாமாவின் இளமைக்காலத்தைப்பற்றி என்னால் நேரடிஅனுபவங்களை பெறமுடியாவிடினும் எனது அம்மா மற்றும் ஏனைய உறவினர்களுடன் தொடர்புபடுத்திய வாழ்க்கைப் பதிவுகள் மூலம் அறியமுடிந்தது. திருமணத்தின் பின் நான் நேரடியாக கண்டு கொண்ட அனுபவித்த இவரது நடத்தைகள்மூலம் சிறப்பான வாழ்க்கை கோலத்தை கடைப்பிடித்து வாழ்ந்த ஒரு பெரு மனிதனாக எனது மனதில் இடம் பிடித்துள்ளார்.

மாமா அவர்கள் ஒரு சில வருடங்கள் தான் பாடசாலைக் கல்வியை கற்றாலும் அவரது செயற்பாடுகள் மூலம் பல வருடம் பாடசாலைக்கல்வியைத் தொடர்ந்துள்ளார்.என்றே கூறவேண்டும் அந்தளவிற்கு நிறைந்த அனுபவங்களையும், அறிவையும் கொண்ட ஒருவராகவே காணப்பட்டார்.இன்று பெரிய பாடல் தொகுப்பை படிப்பதென்றால் நிச்சயம் எம்மில் பலருக்கு

அவ்விடயத்துக்குரிய எழுத்துமூலம் தேவைப்படும். ஆனால் அவரோ எந்த வித புத்தகம் எழுத்தாவனங்களும் இல்லாமல் நீண்டபாடல்களையும் பிழையறப்பாடக்கூடிய வல்லமை உடையவராக இருந்தார் "ஞாபகசக்திக்கு ஆழமான கற்றல் அவசியம் "என்பார்கள்அந்தவகையில் குறுகியகாலத்தில் அதிகவிடயங்களை கற்றிருக்கின்றார். ஆழமாகவும் வினைத்திறனுடன் கல்வியை கற்றிருந்ததன் மூலம் அறிவாற்றல் உள்ள மனிதனாக வாழ்ந்திருக்கின்றார். ஒருவரது பெருமைக்கும் சிறுமைக்கும் அவர் வாழும் போது கடைப்பிடிக்கும் பண்புகளோடும் அவரைத் தொட்டுவந்த, விட்டுச் சென்ற,எச்சங்களும் காரணமாக அமைகின்றது. அந்தவகையில் அவருக்கு மருமகனாகும் பேறு எனக்கு கிடைத்ததை இட்டு பெருமை அடைகிறேன். அது எனக்குகிடைத்த பாக்கியமாக கொள்கிறேன். அவரது இறுதி நாள் நிகழ்வும் இதற்கு சான்றாக அமைகின்றது." "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்தில் எல்லாம் உளன்" " என்பதற்கு இனங்க அனைவரது மனங்களையும் தனது பண்பான கனிவான நடத்தைகள் மூலம் கவர்ந்து கொண்டமனிதனாக வாழ்ந்திருக்கின்றார். என்பதை அவரைப்பற்றி ஒவ்வொருவரின் மனதிலும் உள்ள பதிவுகளின் வெளிப்பாட்டின் மூலம் உணர முடியும்.

உள்ளத்தால் உயர்ந்தவர்,உழைத்து உழைத்து பண்பான இல்லறத்தை இனிதுகாத்த எனதருமை மாமனார். இல்லறத்தை நல்லறமாக கட்டிக்காத்த பெருமையுடையவராகவும் வாழ்த்துள்ளார். தனது பிள்ளைகளை பாடசாலைக் கல்வியில் பேரறிவாளர்களாக உருவாக்க முடியாவிட்டாலும் சிறந்த பண்பாட்டாளர்களாகவும் சமுகத்திற்கு ஏற்புடையவர்களாகவும் சிறப்பாக வளர்த்துள்ளார். அதன் மூலம் சிறப்பான குணாம்சங்களையும் பண்பாடுகளையும் வெளிப்படுத்தி இல்லறத்தை சிறப்பாக வழி நடத்தக்கூடிய மனைவி எனக்கு கிடைத்தது அவரின் இல்லற வாழ்க்கையினால் கிடைத்த ஒரு பெறாகவே கருதுகின்றேன். இதன் மூலம் அவர்இறக்கும் வரைக்கும் எனது மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் நல்ல பண்பாடுகளை விழுமியங்களைக் கற்றுக் கொடுக்கின்ற ஆர்வலராகவும்,எல்லோரையும் கட்டிக்காக்கின்ற காவலராகவும் இருந்தார். நான் வெளியிடம் சென்றாலும் வீட்டில் பாதுகாப்பு இல்லை என்னும் கவலை எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை. இனி அந்தக் குறைபோக்க யார்இருக்கார் என நினைக்கும் போதே என் மாமாவின் பிரிவை சகித்துக் கொள்ள முடியாமல் மனம் பேதலிக்கின்றது.

எந்தநேரமும் எதையாவது படித்துக் கொண்டு இருக்க வேண்டும் என்பது அவர் எல்லோரையும் பார்த்து சொல்லும் ஒரு கருத்து. தன் பிள்ளைகளை கல்வியிலே சிறப்பு நிலைக்கு கொண்டு வரவில்லை என்பது அவரது ஏக்கமாக இருந்தது. அதனாலோ தெரியாது எல்லோரும் கிடைக்கும் நேரத்தில்

முழுமையாக கல்வியிலே நாட்டம் செலுத்த வேண்டும் என்று கூறுவார். அவருக்கு கிடைக்கும் ஒய்வு நேரம் எல்லாம் தான் கற்றிருந்த விடயங்களை மற்றவர்க்குச் சொல்லி கொடுப்பதும் இறை திருப்பாடல்களை பாடுவதும் இவருக்கு விருப்பமான ஒரு விடயமாகும். எனது வீட்டில் அதிகாலையில் நான் எழும்புவது கூட இவரது பாடல்களைக் கேட்டு என்றே கூறவேண்டும். இவர் அதிகாலை எழுந்து திருமுறைப்பாடல்களையும் ஏனைய இறைபாடல்களையும் பாடுவார். இதன் மூலம் எமது வீட்டில் ஒரு பக்தி பரவசம் ஏற்படும்.

சித்த மாந்திரீக வைத்திய முறைகளைகளைக்கூட ஓரளவு கற்றுத்தேர்ந்துள்ளார். இதனால் எனது மனைவி பிள்ளைக்கு ஏற்படுகின்ற சிறுவியாதி உடல் வேதனைகளைப்போக்கும் ஒரு வைத்தியராகவும் தொழிற்பட்டு இருக்கிறார். மாமா அவர்கள் வீட்டிலே இருக்கும்போது வைத்தியரை அருகாமையில் வைத்திருப்பது போன்று நம்பிக்கை எனக்கிருந்தது இவற்றையெல்லாம் நினைத்து விட்டு அவர் பிரிவை எண்ணிப்பார்க்க ஜிரணிக்க முடியாமல் என்மனம் வெந்து வாடுகின்றது.

குடும்பநலனில் அவர்காட்டிய அக்கறை, பேரப்பிள்ளைகளில் அவர் காட்டிய அன்பு, உற்றார் உறவினர்களில் அவர் பேணிப்பழகிய முறை, பெற்ற பிள்ளைகளிடமும், பேரப்பிள்ளைகளிடமும் அதைவிட பிறபிள்ளைகளிடமும் அவர் காட்டிய அன்பு, அக்கறை இதேபோன்று உடன்பிறந்தோர், நண்பர்கள், உறவினர்கள், தனக்கு தெரிந்தோர், தெரியாதோர் என அனைவரிடமும் அவர் காட்டிய அன்பும் பரிவும் என்றும் எண்ணிப்பார்க்க வேண்டியவையாகும். இப் பண்புகள் தொடர்ந்தும் எம் சமூகம் பின்பற்ற வேண்டியவையாகும். இதன் மூலம் அவர் எம்மைவிட்டு பிரிந்தாலும் அவரின் நினைவுகள் அவர் விட்டுச்சென்ற பணிகள், பதித்து சென்று தடங்கள் நீங்காது அவைஎம்மையும் ஒரு சிறந்த மனிதனாக உருவாக்கி செல்லும். அந்தவகையில் எனது மாமாவின் ஆத்மா என்றும் இறைவனது திருப்பாத கமலங்களில் அமைதி பெற பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**மருமகன்**
**இ. மேகராசா (மணி)**

# கதிரவன் பெற்றெடுத்த மண்ணுலக மாணிக்கம்

காலம் சென்ற அமரர் கதிராமப்போடி மாணிக்கப்போடி அவர்கள் பண்டாரியாவெளியில் கடந்த 05.04.1929ம் திகதி பிறந்து அரசடித்தீவில் புகுந்து இப்பிரதேசத்து மக்களால் நன்கு மதிக்கப்பட்டு வந்தவர் மண்முனை தெ.மே பிரதேசத்தில் வயதில் நூற்றாண்டை எட்டிப்பிடிக்க முயற்ச்சித்துக் கொண்டிருக்கும் போது இவர் எம்மை விட்டுப் பிரிந்தார்.

இவ்வாறு நீண்டகாலம் வாழ்வதற்கு எல்லோருக்கும் வாய்ப்புக்கிடைப்பதில்லை. இவ்வாய்ப்பினை இறைவனிடம் பெற்ற அமரர் மாணிக்கப்போடி அவர்களை நாம் வாழ்த்த வேண்டியது நம்மனைவரினதும் கடப்பாடாகும் அன்னாரின் மரணம் ஒரு மங்கல மரணம் எனத்திருப்த்தி அடைவோம்.எனினும் ஒருவர் மரணித்தும் அவரது மரணம் பற்றி எண்ணிப்பார்ப்பது மிக அவசியமாகிறது.

நாம் ஒரு மனிதனின் வாழ்வை மதிப்பீடு செய்யும் போது அவர் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பது அவ்வளவு முக்கியம் பெறுவதில்லை.மூத்தவர்கள் எல்லாம் முதிர்ச்சியடைந்தவர்களாக இருப்பதில்லை ஒரு நூற்றாண்டு வாழ்ந்தும் சோற்றுக்குகேடும்,பூமிக்கு பாரமுமாக வாழ்ந்தவர்களை பார்த்திருக்கின்றோம் இத்தகையோரின் முதிர்ச்சியோ!அனுபவமோ! வாழ்பவர்களுக்கு எவ்வகையிலும் உதவுவதில்லை.இவர்கள் வாழ்ந்தும் வாழாதவர்களே ஒருமனிதன் எவ்வளவு காலம் வாழ்ந்தார் என்பதைக்காட்டிலும் அவர் எப்படி வாழ்ந்தார் பிற்சந்ததியினருக்கு என்ன பயனுள்ள எச்சங்களை இட்டுச் சென்றார்,என்பதுவே வாழ்வை மதிப்பீடு செய்ய உதவுவையாக உள்ளது.அமரர் மாணிக்கப்போடி அவர்கள் வாழ்ந்த காலங்களில் அனுஸ்டிக்கப்படும் கந்தசஸ்ரி,விநாயகர்சஸ்ரி, சிவராத்திரிவிரதம் போன்ற விரதங்களை அனுஸ்டிக்கும் அடியார்கள் மத்தியில் சம்பந்தப்பட்ட புராணங்களை ஓதி அடியார்களை நெறிப்படுத்துவது,அதிகாலையில் மலர் பறித்து இறைவழிபாடு செய்வது, இவரது வழமையாகும். இவ்விரு பணியிலும் இவர் மிக்க நாட்டமுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மண்ணில் பிறந்தவையாவும் மண்ணுக்கே உரியதுதானே உண்மை.உலகத்தில் உள்ள அனைத்துமே நிரந்தரமற்றது.பாம்பு காலத்துக்கு காலம் தன்சட்டையை களற்றுவது போல் ஆத்மாவும் பிறவி எனும் சட்டையை தன்வினைக்கேற்ப காலத்துக்குகாலம் மாற்றிக்கொள்கின்றது. மாற்றம் எப்போது? எங்கே? எப்படி? என்பதை அறிய முடியாததே விந்தை ஒப்பந்த அடிப்படையில்

வாழும் நிலம் வீடு அமைவது போல நமக்கும் வாழ்வு அமைகிறது, என்ற உண்மையை உணர்ந்து வாழ்வாங்கு வாழ்வதே மனிதம்.

இன்று இவர் நம்மத்தியிலில்லாது இயற்கையெய்தி விட்டார் இதனை மரணம் என்கின்றோம் மண்ணுலகத்தில் பிறப்பெடுத்த எல்லா பிறப்புகளும் சதா மரணத்தினை நோக்கிப் பயணித்துக்கொண்டே இருக்கின்றன,இதுவே உண்மை நிலை உடலை விட்டு உயிர் பிரிவது மரணம். அதன்பின் உடலை எரிக்கின்றோம் அல்லது புதைக்கின்றோம்,இவ்வுடலை விட்டுப் பிரிந்த உயிருக்கு என்ன நேர்ந்தது இது வினா? இந்த வினாவிற்கு ஆத்மீகவாதிகளும் , அறிவியலாளர்களும் பதில் கூறமுனைகிறார்கள் ஆத்மீக வாதிகளின் கருத்து ஒன்றுபட்டதாகவில்லை சமயத்திற்கு சமயம் இப்பதிவில் விகற்பம் காணப்படுகின்றது.குறிப்பாக இந்து சமயம் இதுபற்றி பலவிளக்கங்களை தருகின்றது இவ்விளக்கங்கள் இந்தியாவில் பல மொழிகளிலும் வெளிவந்துள்ளதாக தெரிய வருகிறது,தமிழ் மொழியில் கருட புராணம்,விஸ்னுபுராணம் ,மகாபாரதம்,பிரபஞ்ச உற்பத்திஆகிய நூல்கள் இவ்வினாவிற்குவிடைதர முயற்சிக்கின்றன.ஒருவரது உடலிலிருந்து பிரிந்த உயிர் யமதூதரினால் யமலோகத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது. அங்கு காலம் முடித்தவர் உயிர்தான் கவரப்பட்டதா?என்னும் பரிசீலனை நடைபெறும். அது சரியென ஏற்றுக்கொள்ளப்பட்டதும்அவ்வுயிர் மீண்டும் பூலோகத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. வீட்டில்அவர் மரணித்த இடம்,இறந்தவஉ வீட்டுமுன்கூரை,கடப்படி இவையெல்லாம் உயிர்கள்நிற்கும் இடங்களாக கொள்ளப்படுகின்றன.

இன்னம்பிக்கையில்தான் முன்கூரையின் மேல் குடை வைத்தல் பிண்டம் போட்டு வழிபாடு செய்தல்.வீட்டினுள் மரணித்த இடத்தில் தீபம் ஏற்றி தண்ணீர் வைத்தல். கடப்படியில் தண்ணீர் வைத்தல் இவையாவும் செய்யப்படுகின்றன. இவ்வுயிர்பூலோகத்தில் சிலகாலம் சஞ்சரிக்கும் இக்காலப்பகுதியில் இறந்து போனவர் ஊரில் முன்னிரவுவேளையில் யமதூதர் உலாவிவருவார் அவ்வேளையில் இறந்து போனவர் பற்றிய பொதுசன அபிப்பிராயம் யமதூதரால் சேகரிக்கப்படுகிறது இவ்விடப்பட்ட உயிர் மீண்டும் யமதூதர்களால் யமலோகத்திற்கு கொண்டு செல்லப்படுகின்றது.இங்கு இறந்து போனவற்கு ஒதுக்கப்பட்ட பக்கம் சித்திரபுத்திரரினால் பேரேட்டில் தேடி எடுக்கப்படுகின்றது.

அத்தோடு பூலோகத்தில் சேகரித்துச்சென்ற பொது மக்கள் அபிப்பிராயக் கோவையும் சித்திரபுத்திரரினால் ஒன்றினைத்து ஆராயப்பட்டு மதிப்பீட்டறிக்கை யமதர்மராசனிடம்சமர்ப்பிக்கப்படுகின்றது.அப்போதுதான் அந்த உயிர் என்னிலையை அடைய வேண்டும் என்று இறுதி அறிக்கை வெளியிடுவார். மறுபிறப்பா? உத்தரிப்புத்தலமா? பிறப்பற்ற நிலையா? என்பதை வெளிப்படுத்துவார்.

சைவபுராணத்தின் கூற்று சரியோ?பிழையோ?இங்கு ஆராய வேண்டியதில்லை,யமதர்மராசன் தீர்ப்புக்கூறுவதற்கு அமைந்துவிடுவது மக்கள் அபிப்பிராயம் என்பதேயாகும்.

அறிவுப்பெருங்கடல் அண்ணா அவர்களின் கருத்தும் இக்கருத்தினை அடியொற்றியதாகவே அமைந்துள்ளது. அவர் கருத்துக்கள் பின்வருமாறு உடலைவிட்டு உயிர்பிரிந்ததும் அவ்வுயிர் சொறகலோகம் போவதோ? அல்லது நரகலோகம் சென்று உத்தரிப்புத்தலத்தில் வேதனைப்படுவதோ? இவையாவும் மக்களின் பெரும்பான்மைத்தீர்ப்பினை பொறுத்தே ஆகும்.

மரணம் நிகழ்ந்ததில் இருந்து மக்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்துவார்கள் அக்கருத்தக்கள் பின்வருமாறு மரணித்தவர்கள் வாழ்ந்த காலங்களில் எல்லோரிடமும் அன்பாய்ப்பழகுவார்,யாரையும் கடிந்து பேசமாட்டார்,அவர் ஒரு அப்பாவி,அவரின் ஆன்மா சொறகலோகம் போய்ச்சேரும் எனவும்,பிறிதொருசாரார் அவர் நடந்த இடத்திலும் புல்லுச்சாகாது,பசுஇயல்பினை ஒத்தவர்,மேலும் இவர் மானிட வடிவில் நடமாடிய தெய்வம் மனிதருள் மாணிக்கம், அவரின் ஆத்மா நிட்சயம் நற்கதியடைந்தேயாகும், எங்கள் பிரார்த்தனை வீண்போகாஎன்று மக்கள்குரல் அப்பிரதேசத்தின் முலை முடுக்குகளிலும் ஒலிக்கிறது இவை ஒருபாலாரின் கருத்தாகும். இதற்குநேர்மாறாக வேறுசிலரின் கருத்துக்கள் அமைகின்றன சண்டாளன்,முட்டாள்,துரோகி,பஞ்சமா பாதகன்,அவன் ஆன்மா நரகலோகத்தில் நிட்சயம் அழுந்தியேயாகும்,இவ்வாறு அவரவர் உயிர்வாழ்ந்த காலங்களில் நடந்துகொண்ட முறைகளுக்கமைய மக்கள் பலவாறு கூறுவார்கள் இவை மக்கள்மத்தியில் பலபிரதேசங்களிலும் ஊசலாடும் கருத்துக்களாகும் இவைகளை யமதர்மதூதர் சேகரித்து யமதர்மராசனிடம ஒப்படைப்பார்.எனவே யமதர்மராசனின் தீர்ப்பும் இவைகளைஅடியொற்றியதாகவே அமையும் என்பது புராணங்கள் புகட்டும் ஒருமித்த கருத்துக்களாகும். ஆதலால் தாம்செய்தவினை தாமே அனுபவித்தாக வேண்டும்

" அழுதழுது அவள்பிள்ளையை அவளே பெறவேண்டும்"

மரணம் எப்போது வரும்?எந்த இடத்தில் வரும்?என்ன வடிவத்தில் வரும்?எவராலும் அறிந்துகொள்ளமுடியாது. மரணம் வினாடியிலும் வரும் ஆதலால் மனித உயிர் வாழுங்காலத்தில் தியானம், தருமம்,இறைதொண்டு ஆகிய நற் கருத்துக்களைச் செய்து செல்கதிக்கு நாம் தேடவேண்டும்

செல்விருந்து போக்கி
வருவிருந்து வரவேற்று
செழித்த முகத்துடன் அகம் புரித்து வாழ்வோமாக

" ஒருமைக்கான் தான்கற்ற கல்வியொருவன்
கெழுமையு மேமாப்புடைத்து".....

(இது பொய்யா மொழியின் கூற்று)

ஒருவர் கற்ற கல்வி அவரின் ஏழுபிறவிற்கும் பயன்படுமாம் எனக்கல்விற்கு காலஎல்லை காட்டியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை.ஆனால் அவரோ, அவரின் சமகாலத்தில் வாழ்ந்த ஔவையாரோ, அன்னாருக்கும் பின்னர்வாழ்ந்த கம்பரோ,பட்டினத்தடிகளோ,பாரதியாரோ, தருமத்திற்கு அவை பயன்படும் கால எல்லை கணிக்கவில்லை ஆதலால் தருமத்தின் மகிமை அளப்பரியதுபோலும்.

காந்தற்கடவுளாகிய கண்ணபிரானையே கையில் பாத்திரயேந்தி யாசகம் கேட்கவைத்தது அல்லவா?தருமம்! எனவே அமரத்துவம் அடைந்துள்ள இப்பெருமகனார் மானிடப்பிறவியெடுத்து இம்மண்ணுலகத்தில் நீண்டகாலம் வாழ்ந்து தீர்க்காயுள் மரணம் அடைந்துள்ளார்.

வயதெல்லையைக்கொண்டு மரணத்தை 04பிரிவுகளாக பிரித்துள்ளனர்

1. அற்ப ஆயுள் மரணம் (குழந்தைப்பருவம்)
2. மத்திய ஆயுள் மரணம் (45வயது)
3. நீடித்த ஆயுள் மரணம் (78வயது)
4. தீர்க்க ஆயுள் மரணம்( 95 வயது)

நிட்சயமற்ற வாழ்வு
நீர்க்குமிழி போன்ற நிலையற்ற வாழ்வினை
நிரந்தரமானதென்று நினையாது
நாமுமதுவழியே நாம் போமளவும்
எமக்கென்ன என்று இட்டுண்டிரு

சுபம்

**திரு செ.சற்குணம்**
**(அரசடித்தீவு இ.ச.வ.மன்றம்,**
**முதியோர்சங்கம்,**
**ஓய்வூதிய சங்கம் ஆலோசகர்.)**

# நீங்கா நினைவுகளில்
# எங்கள் ஆருயிர் அம்மப்பா

"தோன்றில் புகளோடு தோன்றுக"என்பதற்கமைய எங்கள் ஆருயிர் அம்மப்பா இவ் அவனியிலே அவதரித்து, வாழ்வாங்கு வாழ்ந்து, சேவை பல செய்து 07.05.2012 அன்று எங்களையெல்லாம் துயரத்தில் ஆழ்த்தி விட்டு சென்றுவிட்டார். இருந்தும் எங்கள் அம்மப்பா போல் எங்கள் மீது அன்பும்,அக்கறையும் செலுத்த எங்கள் அம்மப்பாவுக்கு நிகர் அம்மப்பாதான். அவ்வாறு அம்மப்பா எங்கள் மீது கொண்ட பாசத்தினை, உறவினை,எங்கள் முன்னேற்றத்தின் மீது கொண்ட அவாவினை பட்டியற்படுத்தவோ, அளவிடவோ முயல்வோமனால் அதனை எழுத முயற்சித்தால் இப்புத்தகமே அடங்காது. அந்தளவிற்கு எங்களுடன் உயிருக்குயிராய் இருந்து எங்களின் நல்வாழ்விற்கு வித்திட்டார் என்பதை என்றுமே மறக்கமுடியாது.எங்கள் அம்மப்பா இன்னும் பல வருடங்கள் எம்முடன் வாழ வேண்டும்,நாங்கள் அவருடைய அறிவுரைகள், இனிமையான கீதங்களை கேட்க வேண்டும்,எங்கள் முன்னேற்றத்திற்கு உந்து கோலாக நீங்கள் இருக்க வேண்டும் என்று பேராசைப்பட்டோமே அம்மப்பா. இன்று காலனவன் தன் கடமை தனை நிறைவேற்றி விட்டானே அம்மப்பா.எங்கள் ஆசை மட்டும் நிறைவேறவில்லையே அம்மப்பா.என்றும் நீங்கா நினைவுகளில்......

எங்கள் அம்மப்பாவின் ஆன்மா ஈடேற்றம் பெற நாம் என்றும்
இறைவனை பிராத்திக்கின்றோம்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**என்றும் பிரிவால் துயருறும்**
**பேரப்பிள்ளைகள்**
**காயா, டோபா, சாந்**

# கவிக் காணிக்கை...

பழகு தமிழில் தென்றல் இசைபாடும் அழகுமிகு
அரசையூர்பதியில் இன்று உம் பிரிவால் அப்பா
வெண்மேகம் கறுததபந்தல் போட்டது சோக இருளால்......

அப்பா நீங்கள்இறந்து விட்ட செய்தி
இடியாய் விழுந்ததுஇதயம் சில நொடிகள்
இயங்க மறுத்து நின்றது!!

பிறப்போர்க்கெல்லாம்இறப்பியல்பென்று தெரிந்தும்
பாடையிலே நீர் ஏற
நெடுந்தூர பயணமாகவாடைக்காற்றில் வதங்கிய பயிர்போல்
எம் குடும்பத்தினர் கலங்கி அழநெஞ்சுடைந்து போனதையா
பொய்யுலக வாழ்வை எண்ணி

கண்டவுடன் சிரித்துகனிவுடன் பேசுவீர்
பணிவுடன் வாழ்ந்து
பலருக்கும் அறிமுகமானீர்இன்று உம்முயிரை
கொடுத்தவன் பறித்ததால்துயரில் துடிக்கவைத்து நீங்கள்
இறைவனடி சேர்ந்துவிட்டீர்கள் அப்பா
உங்களது ஆத்மா சாந்தியடைய நாமும் இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும் மகன்
பாலசுந்தரம்,
அரசடித்தீவு.

# என்றும் மனதைவிட்டு நீங்காத எனது தந்தையே

பண்பிற்கும் பாசத்திற்கும் பிறப்பிடமாய்
கடமை,கண்ணியம்,கட்டுப்பாடு மனிதநேயம் போன்ற
சகல நல்லொழுக்கங்களுக்கும் இலக்கணமாய்
நீங்கள் வாழ்ந்த வழியே
எம்மை உயர்த்தி வையகத்தில் சிறந்த மனிதராய்
நிறையுடைமை நீங்காமை வேண்டி
பொறையுடைமை போற்றி
ஒழுகப்படும் தமிழ் மறையான
திருக்குறள் கூறுவதை சிரத்தையில் இருத்தி
செந்தமிழால் சீரிய கல்வியை
சிறப்பாகத் தந்து தன்கடமைகளை
சீராக நிறைவேற்றிய அன்புத் தந்தையே....

உங்கள் பிரிவால் துயருறும்
உங்கள் அன்பு மகன்
பரமானந்தம்
அரசடித்தீவு



# அன்புத் தெய்வமே எங்கள் அப்பா

பெற்றுச் சீராட்டி எம்மை
பேணி வளத்தாயப்பா
வாழ்வில் நீ ஓயவில்லை
அணையவும் இல்லையப்பா.

மனம் நிறைந்த வாழக்கை
அமைத்து தந்தீரப்பா
தினந்தோறும் உடனிருந்து
தேவை தீர்த்து வைத்தாயப்பா.

மரணம் வந்த நாள் வரைக்கும்
நீர் மக்களை கைவிட்டதில்லை
அப்பா உம் கடமைகளை
தப்பாமல் செய்தாயப்பா.

எப்பாவம் யாம் செய்தோம்
இன்று உமை இழந்து விட
தப்பென்ன நாம் செய்தோம் எமை
தவிக்கவிட்டு மறைவதற்கு?

பேரப்பிள்ளைகள் நால்வர்
பேதலித்து நின்றிருக்க
ஆரப்பா இனிஅவர்களுக்கு
அம்மப்பா என அழைக்க.

மறக்க முடியுமாப்பா-நாங்கள்
இருக்கும் வரை உங்களுக்காய்
பிறக்க வேண்டும் பிள்ளைகளாய்
மறுபடியும் உங்களுக்கே.

அப்பா உங்கள் நல்லாத்மா
அரனடியில் சேர வேண்டுமென
எப்போதும் அதற்காக-நாம்
பிரார்த்திப்போம்.
ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!

**உங்கள் பிரிவால் துயறும்**
**அன்பு மகள் - மகேஸ்வரி**

# பட்டினத்தார் பாடிய நிலையில்லா வாழ்கை பற்றிய பாடல்

திருவேம்பக விருத்தம்

அன்னை யெத்தனை யெத்தனை யன்னையோ
அப்ப யெத்தனை யெத்தனை யப்பனோ
பின்னை யெத்தனை யெத்தனை பெண்டிரோ
பிள்ளை யெத்தனை யெத்தனை பிள்ளையோ
முன்னை யெத்தனை யெத்தனை செம்மமோ
மூட னாயடி யேனு மறிந்திலேன்
இன்ன மெத்தனை மெத்தனை சென்மமோ
என்செய் வேன்கச்சி யேகம்பனே

திருத்தில்லை

காப்பிணாங் கும்பனைத் தோளார்க்கும்
பொன்னுக்குங் காசினுக்கும்
தாம்பிணாங் கும்பல வாசையும் விட்டுத்
தனித்துச் செத்துப்
போம்பிணந் தன்னைத் திராளாகக் கூடிப்
புரண் டினிமேற்
சாம்பிணாங் கத்துவதை யோவென் செய்வேன்
தில்லைச் சங்கரனே

பட்டினத்தார் புலம்பல்

ஐயிரன்டு திங்களா அங்கம்எலாம் நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச்-செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி

முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபக லாச்சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டுவேன்
வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்து என்னைக் காதலித்து - முட்டச்
சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ விறகிலிட்டு தீமூட்டுவேன்

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்து எடுத்துத் தாழாமே - அந்திப்பகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும்
தாய்தனக்கோ மெய்யிலே தீமூட்டு வேன்

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் -உருசி உள்ள
தேனே அமிர்தமே செல்லத் திரவியபூ
மகனே என அழைத்த வாய்க்கு

மாதா வுடல் சலித்தாள் வல்வனையேன் கால் சலித்தேன்
வேதாவுங் கைசலித்து விட்டானே நாதா
இரும்பையூர் வாழ் சிவனே இன்னமோர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா.

எத்தனை நாள் கூடி யெடுத்த சரீரமிவை
அத்தனையு மன்றிப்ப தல்லவோ? வித்தகனார்
காலைப் பிடித்து மெள்ளக் கருங்குள்பக லற்றிடத்தே
மேலைக்குடியிருப்போமே

என் பெற்ற தாயாரும்மென்னைப் பிணமென்றிகழ்ந்து விட்டார்
பொன் பெற்ற மாதரும் போவென்று சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும்பின்வலம் வந்துகுடமுடைந்தார்
உன்பற்றொழிய ஒருபற்று மில்லை உடையவனே

முத்தி திருஞான மொழியாம் புலம்பல்சொல்ல
அத்தி முகவன்றன் அருபெறுவ தெக்காலம்
ஆங்காரமுள்ளடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம் பெறுவ தெக்காலம்
நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணை வெள்ளந் தேக்குவது மெக்காலம்

கலிவிருத்தம்
முன்னை இட்டதீ முப்பு ரத்திலே
பின்னை இட்டதீ தென் இலங்கையிலே
அன்னை இட்டதீ அடிவ யிற்றிலே
யானும் இட்டதீ மூள்க மூள்கவே.

அறந்தான் இயற்றும் அவனிலும் சேடி அதிகமில்லம்
துறந்தான் அவனிற் சதசேனடி உள்ளத் துறவுடையோன்
மறந்தான் அறக்கப் றறிவே டிருந் திருவாதை யற்று
இறந்தான் பெருமையை என் சொல்லுவேன் கச்சியே கம்பனே.

கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் காலத் தச்சன்
வெட்டி முறிக்கும் மரம்போல் சரீரத்தை வீழ்த்தி விட்டால்
கொட்டி முழக்கி அழுவார் மயானம் குறுகியப்பால்
எட்டியடி வைப்பாரோ? இறைவா!கச்சியே கம்பனே

பிறக்கும் பொழுது கொடு வந்ததில்லை பிறந்து மண்மேல்

இறக்கும் பொழுது கொடுபோவதில்லை இடைநடுவிற்
குறிக்க மிச் செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலா மருக் கென் சொல்லுவேன் கச்சியே கம்பனே

ஊருஞ்சதமல்ல உற்றார் சதம்ல்ல உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல பெண்டீர் சதமல்ல பிள்ளைகளுஞ்
சிருஞ் சதமல்ல செல்வஞ் சதமல்ல தேசத்திலெ
யாருஞ் சதமல்ல நின்றாள் சதங்கச்சியே கம்பனே

முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும் முடிவிலோரு
பிடிசாம்பிராய் வெந்து மண்ணாவது கண்டு பின்றுமிந்த
படிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னி அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றேயறிவாயே கச்சியே கம்பனே.

பத்தும் புகுற்து பிறந்து வளந்து பட்டாடை சுற்றி
முத்தும் பவளமும் பூண்டோடி ஆடி முடிந்த பின்பு
செத்துக்கிடக்கும் பிணத்தருகே இனிந் சாப்பிணந்கள்
கத்தும் கணக் கென்ன கனண் கயிலா புரிக் கானகத்தியே

அத்தமும் வாழ்வும் அகத்துமட்டெவிழி அம் பொழுக
மெத்திய மாதமும் வீதிமட்டே விம்மி விம்மி இரு
கைத் தலை மேல் பைத்தியம் மைத்தரும் சுடுகாடுமட்டே
பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய சளவுமே

உன் பெற்ற தாயாரும் உன்னைப் பிணம் என்று இகழ்ந்து விட்டார்
பொன் பெற்ற மாதரும் போவென்று செல்லிப் புலிப்பி விட்டார்
கெனன் பொற்ற மைந்தரும் பின்வந்து குடமுடைத்தார்
உன்பற்றொழிய ஒருபற்றுமில்லை உடைழயவனே

அழுதாற் பயனென்ன சொத்தாற் பயனென்ன ஆவதில்லை
தொழுதாற் பயனென்ன நினை யொகுவர் சுடவுகைந்த(ரு)
பழுதாற் பயனென்ன நன்மையும் தீடையும் பங்கையத்தோன்
எழுதப்படிவருமோ?கச்சியே! கம்பனே

இருப்பது பொய் போவது மெய் என்று எண்ணி நெஞ்சே
ஒருத் தருக்கும் தீயவினை உன்னாதே பருத்த தொந்தி
நம்மதென்னு நமிருக்க நாய் நரிகள் போய் கழுகு
தம்ம தொன்று தாமிருக்குமேதான்

கல்லாப்பிழையுங் கரதாப்பிழையும் கசிந்துருகி
நில்லாப்பிளையும் நின் அறுஞ் செழுத்தை
சொல்லாப்பிழையுந் துரியாப் பிளையுந் தொழாப் பிளையும்
எல்லாப்பிழையம் பொறுத்தருள்வாய் கச்சியே கம்பனே

# மறக்க முடியவில்லை அப்பப்பா உங்களை . . .

அன்பான வார்த்தை பேசி
அழைத்திடும் குரல் காதினிலே
இப்போது இனிமையாக கேட்கிறது.
மறக்கமுடியவில்லை அப்பப்பா உங்களை.......................

குழந்தைபருவத்தில் அத்தை வீடு வந்தபோது
குறும்பாக எம்முடன் கழித்த பொழுதுகள்
குதூகலம் நிறைந்த அந்நாட்களை
மறக்கமுடியவில்லை அப்பப்பா உங்களை.......................

உண்டதும் நூறடி உலாவி உறங்கு என்ற
உன்னத தத்துவத்தை உரைப்பீர்கள்
உங்களைப் போல் தந்தையின் பிதாவை எங்கு காண்போம்
மறக்கமுடியவில்லை அப்பப்பா உங்களை.......................

நிலா முற்றத்தில் எங்களை இருத்தி
நிஜ வாழ்கை உண்மைகளை கதைமூலம் புகட்டிநீர்கள்
கதையின் தாற்பரியம் இப்போது புரிகிறது
கலங்குகின்றோம் புரியும் பருவத்தில் நீங்களில்லை.
மறக்கமுடியவில்லை அப்பப்பா உங்களை.......................

தரம் பார்க்கும் சமூகத்தில் கிரம் போற்றவாழ்வதற்கு
உரமாகத் தன் உதிரத்தை பாவாகத் தந்தீர்கள்
சிந்தியவியர்வைத்துளியை விரலினால் வீசி எறிந்து
வல்லவனாக வரவேண்டும் என சுமைதாங்கியா நின்று காத்தீர்கள்
மறக்கமுடியவில்லை அப்பப்பா உங்களை.......................

கண்களில் சமத்துவமும்
கடமையிலே கண்ணியமும்
காலமதைப் பேணி என்றும்
கலங்கரை விளக்கெனவே ஒளி தந்தீர்கள்
மறக்கமுடியவில்லை அப்பப்பா உங்களை......................

அன்பு என்ற வார்த்தையை
அறியாப் பருவம் முதல் அதை அமுதாய் ஊட்டிய
உங்கள் அன்பை எம்வாழ்வில்
என்றென்றும் மறவோமே அப்பப்பா
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**பேரப்பிள்ளைகள்**
**விஜி,வவி,விநோ**



# அப்பப்பா

அன்பென்றால் எம் அப்பப்பா
அறிவுரை கூறி எம்மை வழிநடத்திய ஆசான் அப்பப்பா

பக்திமான் எங்கள் அப்பப்பா
ஆசிரியப்பணி யென்றால் முன்நிற்பார் எம் அப்பப்பா

குடும்பக் குலவிளக்கு எம் அப்பப்பா
எவருடனும் அன்பு மொழிபேசிடுவார் எம் அப்பப்பா

திருநீற்றுப்பூச்சுடனே எம் அப்பப்பா புன்சிரிப்பு சிரிக்கையிலே
கொடியோனும் உள்ளம் கசித்திடும் அன்பாழன் எம் அப்பப்பா

ஐந்து பிள்ளைகளை அன்புடனே பெற்றேடுத்து
நலலோழுக்கமூட்டி வளர்த்திட்ட பண்பாளர் எம் அப்பப்பா

இறுதி நேரத்திலே காலன் அவன் உன் உயிரை பிரிக்கையிலெ
பதறிவிட்டோம் நாங்கள் காலன் அவன் செயல்கண்டு

நீ எம்மை விட்டு விலகி முப்பத்தொரு நாள்
சென்று விட்டது எம் அப்பப்பா

முப்பத்தொரு நாளென்ன ஆண்டாண்டு சென்றாலும்
உம்பிரிவை ஆற்ற முடியாது எம் அப்பப்பா

உன் ஆத்மா இறைவனடி
சேர பிராத்திக்கின்றோம்

**பேரன்**
**வ.வேணு**

# குழந்தை வாழும் சூழலுக் கேற்ப குணங்களும் கற்றுக் கொள்கின்றது

புகழ்ச்சியோடு வளர்க்கப்படும் குழந்தை
பிறரை பாராட்ட கற்றுக் கொள்கின்றது
பகமை உணர்வோடு வளர்க்கப்படும் குழந்தை
சண்டை இடுவதற்கு கற்றுக் கொள்கின்றது
பாதுகாப்புடன் வளர்க்கப்படும் குழந்தை
தன் நம்பிக்கையை கற்றுக் கொள்கின்றது
குறை காண்பதற்கு மத்தியில் வளர்க்கப்படும் குழந்தை
பழி சுமத்துவதற்கு கற்றுக் கொள்கின்றது
சகிப்பு தன்மையோடு வளர்க்கப்படும் குழந்தை
பொறுமையை கற்றுக் கொள்கின்றது
ஏளனத்தின் மத்தியில் வளர்க்கப்படும் குழந்தை
வெட்கப்படுவதற்கு கற்றுக் கொள்கின்றது
அவமானத்தின் மத்தியில் வளர்க்கப்படும் குழந்தை
குற்ற உணர்வை கற்றுக் கொள்கின்றது
நேர்மையோடு வளர்க்கப்படும் குழந்தை
நியாயத்தை கற்றுக் கொள்கின்றது
மற்றவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு வளர்க்கப்படும்
குழந்தை துணிவை கற்றுக் கொள்கின்றது
வரவேற்பிற்கும் நன் மதிப்பிற்கும் மத்தியில் வளர்க்கப்படும்
குழந்தை உலகின் அன்பை காண்பதற்கு கற்றுக்கொள்கின்றது.

# ஆசை அம்மப்பா

அன்பு மொழி பேசி அனைவர்
மனதிலும் தனக்கென ஒரு முத்திரை
பதித்த எங்கள் ஆருயிர் அம்மப்பாவே
இன்று எங்களை தவிக்க விட்டு
எங்கு சென்றிங்க அம்மப்பா
"கந்தை யானலும் கசக்கிக்கட்டு
கூழாயினும் குளித்து குடி" என்று வாழ்வியல்
ஒழுக்கங்களை புகட்டினீங்களே அம்மப்பா
இன்று எங்களுக்கு அறிவு புகட்ட மறுத்து
எங்கு சென்றீங்க அம்மப்பா
காலை எழுந்ததும் இறைதுதியில்
ஈடுபட்டு பாமாலை பாடி அவ் இனிய
கீதத்துடன் துயில்நீங்கிடுவீங்களே அம்மப்பா
இன்றுஉங்கள் கீதத்தினை பாடமறுத்து
எங்கு சென்றீங்க அம்மப்பா
உங்கள் ஆத்மா சாந்தி பெற
என்றும் இறைவனை பிராத்திக்கின்றோம்

**பேரன் தீக்கசாந்**
**தரம் - 4**



## தான பலன்

யாகங்கள் கோமங்கள் செய்யும் போது நீத்தார் கடன்கள் செய்யும்போது அவரவர் சக்திக்கேற்ற தானங்கள் செய்வதுசாஸ்திரவிதி சாதாரண காலங்களில் பாத்திரமறிந்து பிச்சையிடு என்ற பழமொழிக்கேற்ப தகுதியறிந்து செய்யும் தானங்களால் பல்வேறு புண்ணியபலன் உண்டு

- ❖ அன்னதானம் - தரித்திரமும் கடனும் நீங்கும்
- ❖ வஸ்திர தானம் - ஆயுளை விருத்தி செய்யும்
- ❖ பூமிதானம் - பிரம்மலோகத்தையும் ஈஸ்வர தரிசனத்தையும் நல்கும்.
- ❖ தேன்தானம் - புத்திர பாக்கியம் உண்டாகும்
- ❖ கோதானம் - ரிஷிக்கடன் தேவகடன் பிதுர்கடன் ஆகியவற்றை அகற்றும்
- ❖ நெல்லிக்கனிதானம் - ஞானமுன்ட தீபதானம் - கண்பார்வை தீக்கமாகும்.
- ❖ அரிசிதானம் - பாவங்களைப்போக்கும்
- ❖ நெய்தானம் - நோய்தீர்க்கும்
- ❖ பால் தானம் - துக்கம் நீங்கும்
- ❖ தயிர்தனம் - இந்திரிய விருத்தி
- ❖ தேங்காய் தானம் - பூரண நலன், நினைத்த காரியம் முடியும்
- ❖ பழங்கள் தானம் - புத்தியும்,சித்தியும் கிட்டும்
- ❖ தங்கம் தானம் - குடும்பதோசம் நீங்கும்
- ❖ வெள்ளிதானம் - மனக்கவலை வேதனை நீங்கும்

## முக முழிப்புக்கு நல்லவை

கஞ்சம் தங்கம் தீபம் கண்ணாடி அல்அங்கி
செஞ்சந்தம் நீர் மண் சிவலிங்கம்-மஞ்சங்கல
கற்றர் தமது வலக்கை மனை கடாரிஇவை
உற்றால விழிப்பில் உத்தமம்.

கஞ்சம்-தாமரை
அல்அங்கி-புகை அற்ற நெருப்பு

## புத்தாடை அணிய

காரியில் அழுக்கதாம்
கதிரவன் பிடை போகும்
மாரியில் நனையும் திங்கள்
வன்புதான் கந்தையாகும்
வீரிய மில்லைச் செவ்வாய்
வெள்ளியில் மடத்தை சேர்வான்
கூரிய வியாழன் குலவிய நன்றாம் ஆடைசாத்த்.

## வாழ்வியலில் மறைந்தவை

1.குட்டன்
2.கட்டுப்பொட்டி
3.தலகாரப் பெட்டி
4.புட்டுப் பெட்டி
5.அண்டாப்பானை
6.அலாய் விலாய் பானை
7.வல்லுகம்
8.உறி
9.திருகாணி
10.சுரைக்குடுகு
11.நாடங்குடுகு
12.திருநீற்று குடுகு
13.கிணத்துப்பட்டை
14.பெட்டகம்
15.தலை வாசல்
16.தெருத் திண்ணை
17.உப்புச் சிரட்டை
18.மரக்கொட்டுக்கிணறு
19.வட்டில்
20.சேவரக்கால்
21.படிக்கம்
22.மிதி தடிக்கட்டை
23.வடிக்கா
24.கை விழா
25.உமல்

# நாட்டின் தேசிய விளையாட்டு

1. அவுஸ்ரேலியா-கிரிக்கட்
2. இலங்கை-கரப்பந்தாட்டம்
3. பாகிஸ்த்தான்-கொக்கி
4. துரிக்கி-மல்யுத்தம்
5. யப்பான்-கராத்தே
6. ஸ்கொட்லன்ட்-காற்ப்பந்து
7. கனடா-பனி கொக்கி
8. இந்தியா-கபடி
9. அமெரிக்கா-பேஸ்வோல்
10. ஸ்பெயின்-ஜல்லிக்கட்டு

# சக்தி மிக்க மூலிகைள்

1. சஞ்சீவினி-இறந்தவர்களைப் பிளைக்கச்செய்வது.
2. விசல்ய கரணி-உடல் காயங்கள் எதுவானாலும் ஆற்றுவது.
3. சாவர்ண கரணி-காயத்தின் வடுக்கள் நீக்குவது.
4. சந்தான கரணி-வெட்டுப்பட்ட உறுப்புக்களைஒட்டச் செய்வது.

# ஐம்பொறிகளால் துன்பப்படுபவை

1. யானை - உடம்பால் துன்பம்
2. மீன் - வாயால் துன்பம்
3. விட்டில் பூச்சி - கண்ணால் துன்பம்
4. தேன் வண்டு - மூக்கால் துன்பம்
5. அசுணப் பறவை - செவியால் துன்பம்

# எண்ணெய்க் குறிப்பு

அருக்கன் எண்ணெய் அழகளிக்கும்.
அணியார் திங்கள் திருக்கருஞ்செல்வாய் உயிர் போக்கும் ஆகாது.
செய்ய புதனில் பொருளுண்டாம்.
கருத்தை அழிக்கும் கவின் வியாழன்.
கைப்பொருள் போக்கும் கன வெள்ளி.
பொருத்த முண்டம் சனி.எண்ணெய்
பேரனால் மூழ்க வல்லாரே.

# தெரிய வேண்டியவை

இளகிய உள்ளம் வேண்டின்
இனிய நற்பண்பு வேண்டும்
அழகிய இளமை வேண்டின்
ஆற்றலும் அறிவும் வேண்டும்
உளமகிழ் வென்பதற்கே
உறுதியும் தெளிவும்வேண்டும்
உழல்கின்ற மனதை மாற்ற
உண்மைகள் தெரியவேண்டும்

வாழ்வாங்கு வாழ் வேண்டின்
வறுமையை ஒழிக்க வேண்டும்
தாழ்வெலாம் அகற்றவேண்டின்
சஞ்சலம் தீர்க்க வேண்டும்
ஊள்வினை எதிர்த்த போதும்
உண்மையை உரைக்க வேண்டும்
பாழ்வினை களைய வேண்டின்
பக்தியை வளர்க்க வேண்டும்

சான்றோனாய் வாழவேண்டின்
நூற் பொருள் நுகர வேண்டும்
சார்ந்து சன்னியாசம் கொள்ள
தடைகளை தாண்ட வேண்டும்
ஈன்றவள் பெருமை கொள்ளில்
இனியனாய் வாழவேண்டும்
தோன்றில் புகழ் நிலைக்கத்
தொண்டுகள் செய்ய வேண்டும்

அன்பினால் உயிர்க் குலத்தை
அணைத்து நாம் வாழவேண்டும்
துன்பத்தைக் களைய வேண்டின்
தூய்மையைக் காக்க வேண்டின்
புண் சொல்லைத் தவிர்கவேண்டின்
பொய்மையை அகற்ற வேண்டின்
இவையெல்லாம் செய்ய வேண்டின்
இறைவனின் அருளே வேண்டும்

# மரண அறிவித்தல்

பிறப்பு
1929
04
05



இறப்பு
2012
05
07

## அமரர்: கதிராமப்போடி மாணிக்கப்போடி

(முன்னாள் வட்டை விதானை)

பண்டாரியாவெளியை பிறப்பிடமாகவும் அரசடித்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிராமப்போடி மாணிக்கப்போடி (மு.வ.வி) அவர்கள் 07.05.2012ம் திகதி திங்கட்கிழமை காலமானார்.அன்னார் காலஞ்சென்றவர்களான கதிராமப்போடி, செம்பிப்பிள்ளை அவர்களின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சத்துருக்கப்போடி, வைரமுத்து, பொன்னம்மா, மயிலிப்போடி(கி.சேவகர்), கதிராமப்போடி(வ.வி), வள்ளியம்மை ஆகியோரின் மருமகனும், சைபாகம் அவர்களின் அன்புக்கணவரும், புவனேசசிங்கம், பாலசுந்தரம்,பரமானந்தம் (முன்னாள் காசாளர் ம.தெ.ப.கூ.சங்கம்),வல்லிபுரம்,மகேஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும்,காலஞ் சென்ற கந்தசாமி அவர்களின் பேறாமகனும்,தம்பிப்போடி(சோதிடர்)ஜயாத்துரை,காலஞ்சென்றவர்களான சதாசிவம் (பூசகர்)சிவசம்பு ஆகியோரின் அன்புச் சகோதரரும்,மேகராசா(அதிபர் மட்/கற்சேனை அ.த.க பாடசாலை) மகேஸ்வரி,சரோஜாதேவி,அமிர்தமலர்,தங்கமலர்,பேரின்பம்,காலஞ்சென்ற சிவசம்பு ஆகியோரின் பாசமுள்ள மாமனாரும்,தம்பிராசா ஓய்வுபெற்ற (அதிபரும் சோதிடரும்), அருணாசலம், ஆறுமுகம்(வ.வி)பாலிப்போடி, (வ.வி), தில்லையம்மா, நாகலிங்கம், காலஞ்சென்றவர்களான வேலாப்போடி, கந்தப்போடி (வ.வி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும்,நல்லம்மா,ஞானம்மா,சிவசுப்பிரமணியம்,தங்கேஸ்வரி,செல்லத்துரை, ஞானமுத்து, தீசவீரசிங்கம்,காலஞ்சென்றவர்களான தங்கராசா(வ.வி), கிருஷ்ணபிள்ளை, ஆனந்தபிள்ளை, இரத்தினம்,குமாரசிங்கம் ஆகியோரின் மைத்துனரும்,லிங்கராசா,வசந்தகுமாரி,குபேந்திரராஜா(நிகழ்ச்சி திட்ட உதவியாளர் சுகாதாரஅலுவலகம் வெல்லாவெளி),பேமலாவதி,விஜயராஜா, ஜெயஸ்வரான், சிவனேசகுமா (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் பெரியப்பாவும், இரத்தினசிங்கம்(பூசகர்) ஆகியோரின் சிறிய தந்தையும், ரேணுகா,லேகா ஆசிரியை(மட்/நாற்பது வட்டை விபுலாநந்த வித்தியாலயம்),வரதராஜ், சுகன்யா, டியாகர்,சுபாஜினி,வாகினி, ஜெயகாந்தினி, கோகுலகாந், குவேஸ்காந்,சோபனராஜ், வினோதினி, ரகுவதி, கயாழினி, கிருசாந், டோஜனா, தீர்க்கசாந், முகுந்தன் ஆகியோரின் பாட்டனாரும்,மோனிசாகர்,திவ்வியசாகர் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் 08.05.2012ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 4.30மணியளவில் அரசடித்தீவு பொதுமையானத்தில் நல்லடக்கம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
அரசடித்தீவு.

மயூரா கொமினிகேசன் யூனியன் வீதி அரசடித்தீவு 0770831908,0752336737

# அமரர்.கதிராமப்போடி-மாணிக்கப்போடி

## அவர்களுக்கான கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1929
04
05



இறப்பு
2012
05
07

வரிசைபெறு குடிமனைகள் நிறைந்து
வளமிகு மக்கள் வாழும் எங்கள்
அரசையூரின் கண் பிறந்த எங்கள்
அன்பு நிறை மாணிக்கப்போடி ஐயாவே

மனிதருள் மாணிக்கமாய் திகழ்ந்த எங்கள்
மாணிக்கப்போடி ஐயாவே நீங்கள்
புனிதனாய் என்றும் புன்னகையுடன் எம்
மத்தியில் வாழ்ந்தீர் ஐயா

ஆலய பணிகளிலும் அரசையூரின்
பொதுப்பணிகளிலும் முன் நின்று
கால நேரம் பாராது கருமங்கள் ஆற்றி
என்றும் எம் மக்கள் மனங்களில் இடம் பிடித்தீரே

பிள்ளைகளைப் பெற்றெடுத்து பேணி வளர்த்து
பெருமையுறச் செய்தீரே ஐயா
உள்ளமதில் கள்ளமில்லா உண்மை பேசி
ஊரில் உள்ளவர்களுடன் உறவாடி மகிழ்ந்தீரே

கமத்தொழிலில் ஈடுபட்டு காலமெல்லாம்
உழைத்துண்டு வாழ்ந்தீரே ஐயா
எமதினிய உறவுகளை ஏற்றமுறச் செய்திடவே
இரவு பகல் பாராமல் உழைத்தீரே ஐயா

நெல்வயல் காரர்களின் வட்டைவிதானை
கடமையேற்று நெடுநாட்கள் சேவையாற்றி
நெற்செய்கையாளர் நெஞ்சமெல்லாம்
நிறைந்து நின்றீரே ஐயா

கூற்றுவன் உங்களை குறிவைத்ததென்ன
குவலையத்தில் உங்கள் செயல் போதுமென்றோ
தேற்றுவார் இல்லாமல் அழுகின்றார்
பிள்ளைகளும் பேரக்குழந்தைகளும்

இறைவா இனி என் செய்வோம் நாம்
ஆறதல் வார்த்தை கூற யார் வருவார்
இறைபணிக்கும் எம்மவருள் யார் பொறுப்பு
ஏக்கமுடன் கேட்கின்றோம் இறவைா உன்னிடத்தில்

ஆவியது பிரிந்து அசையாது உடல்
கிடக்கிறது இங்கே ஆனாலும்
கூவி அழைத்திடினும் நின்னுயிர் வந்திடுமோ
கூற்றுவனே கொண்டு தரமாட்டாயோ எம்மவரை......

ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ஆக்கம்: - மாவூரான் ரவி

கோட்டக்கல்வி அதிகாரி, அதிபர்கள்
சங்கம்.ம.தெ.மே கல்விக் கோட்டம்

# நும் துயரில் எம் விழிநீர் படிகின்றது

பிறப்பு 1929 04 05



இறப்பு 2012 05 07

## அமரர்:- கதிராமப்போடி மாணிக்கப்போடி

அரசடித்தீவுதனில் சைபாகம் அம்மையாரை கரம் பற்றி
ஆண்டவன் அருளால் இல்லற வாழ்வை
இன்பமுடன் வாழ்ந்த மாணிக்கப்போடி ஐயா – நீங்கள்
மரணித்த செய்தி கேட்டு மௌனித்தோம் நாங்கள் ஐயா...

ஐந்து பிள்ளைகளை அழகாக பெற்றெடுத்து
அவனியில் சேவைதனை செய்திட
உவந்தளித்தவர் ஐயா நீங்கள் - மறவோம்
நும் பணியை எம் ஊரவர்கள்

ஆலயப் பணியதனை அறப்பணி எண்றெண்ணி
ஆன்மாக்கள் ஈடேற பாமாலை பாடி – நீங்கள்
அடியவரை பக்தி பரவசத்தில் ஆழ்த்திடும்
பக்திமானாய் புத்தியுடன் செயற்படும் மனிதர் ஐயா நீங்கள்

அதிகாலை எழுந்து நீங்கள் ஆண்டவனை வணங்கும்
முறையறியும் நாங்கள் எல்லாம் உன் வழிசெல்ல ஏங்குகிறோம்
தாங்கமுடியவில்லை உம் பிரிவுத் துயர் அறிந்து
ஏங்கித் தவிக்கின்றோம் உம்மைப்போன்ற ஓர் மனிதரை எண்ணி

பிறப்பதும் இறப்பதும் நியதியாச்சி இவ்வுலகில் - நும்
பிரிவுத்துயரில் வருந்தும் உறவுகளை எண்ணி – எம் கிராம
மக்கள் சார்ந்து பிரார்த்திக்கின்றோம் ஆத்மா சாந்தி வேண்டி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கிராம அமைப்புக்களின் ஒன்றியம்
(மத்திய குழு)
அரசடித்தீவு

டிபா கொமினிகேசன் யூனியன் வீதி அரசடித்தீவு-0770832981,0752336737

# கண்ணீர் காணிக்கை ...

| | | |
|---|---|---|
| தாய் மடியில் | | இறை மடியில் |
| 1929 | | 2012 |
| 04 | | 05 |
| 05 | | 07 |



## அமரர் கதிராமப்போடி மாணிக்கப்போடி

பட்டு வேட்டி சட்டையும் பால்வெள்ளை போல்
திருநீறும் சந்தனமும் பூசிய உன் முகவழகு
எம் நினைவில் வந்து வந்து போகும் போது
கலங்குகின்றோம் உம் பிரவுத் துயர் கண்டு

பாசமுடன் பல கதைகள் பகலிரவாய் சொல்லுவீரே
பண்பான நற்சிந்தனையை நாவினிக்க பேசுவீரே
அறிவிற்கும் அறத்திற்கும் வழிகாட்டிய அப்பப்பாவே
எப்பிறப்பில் இனியும் யாம் உமைப்பெறுவோம் ஐயா

நிழலாக நீங்கள் இருக்க – உம்
நினைவுகள் எம்மை விம்மியழ வைக்கிறது
நிஜங்களாகிப் போன நினைவுகளால்தான்
நிம்மதியிழந்து தவிக்கின்றோம் அப்பப்பா

எம்மோடு இருந்த காலமெல்லாம்
எமக்கு இனிய கோலங்கள் - நீங்கள்
விண்ணோடு சென்ற செய்தி கேட்டு
வெடித்ததையா எம் குருதி நாளங்கள்

உம் நினைவுகளை மனதில் சுமந்து
ஆண்டவனை இறைஞ்சி துதிக்கின்றோம்
உம் ஆத்மா சாந்தி வேண்டி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பேரப்பிள்ளைகள்
அரசடித்தீவு.

டீபா கொமினிகேசன் யூனியன் வீதி அரசடித்தீவு-0770832981,0752336737

# கண்ணீர் அஞ்சலி.....

பிறப்பு
1929
04
05

இறப்பு
2012
05
07



அமரர் கதிராமப்போடி மாணிக்கப்போடி

இல்லற வாழ்வை இன்பமாய் வாழும் போது
ஆலயம் நாடி அறம்தனை வளர்க்க
அரும்பாடுபட்ட மாணிக்கப்போடி ஐயாவே
உன் பிரிவுறிந்து தவிக்கின்றோம் நாங்கள் ஐயா

விரத தினங்களில் விருப்போடு ஆலயம் நாடி
பாமாலை பாடி பக்தர்களை ஆன்மீக சிந்தனையில்
நாட்டங்கொள்ளச் செய்யும் உன் சேவைதனை
எண்ணிமுடிக்கொணாது ஏணியாச்சு உம் வாழ்வு

அதிகாலை நீ எழுந்து தடிகொண்டு மலர் பறித்து
இறைவனின் பதி சென்று வணங்கிடும் செய்நேர்தான்
இளையவர் எமக்கு வழிகாட்டிடும்
வாழ்வில் வளம்பல சேர்த்திடும்

பிரிவெண்ணி தவிக்கும் உறவுகள் வழி நின்று
இறை ஆசியோடு வேண்டுகின்றோம்
உம் ஆத்மா சாந்தி வேண்டி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விக்னேஸ்வரர் ஆலய பரிபாலன சபை
அரசடித்தீவு.

Dipa communication MPCS Road Arasadithiovu Mob-0770832981, 0752335737

# துயர் பகிர்வு......



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1929 | 2012 |
| 04 | 05 |
| 05 | 07 |

## அமரர்:~கதிராமப்போடி மாணிக்கப்போடி

பண்டாரியாவெளியை பிறப்பிடமாகவும் அரசடித்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட **கதிராமப்போடி மாணிக்கப்போடி** அவர்கள் 07.05.2012 அன்று இறைபதம் அடைந்த செய்தி அறிந்து அரசடித்தீவு விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் துயரில் ஆழ்ந்துள்ளது. மீளாத்துயரில் பரிதவிக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, இறைபதமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடைய விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம் பிராத்திக்கின்றது.

விக்னேஸ்வரா விளையாட்டு கழகம்,
அரசடித்தீவு.

டிபா கொமினிகேசன் யூனியன் வீதி அரசடித்தீவு-0770832981,0752335737

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு
1929
04
05



இறப்பு
2012
05
07

## அமரர்: கதிராமப்போடி மாணிக்கப்போடி

வயல் நிலமும் நீர்வளமும் பாய்ந்தோடும்
வாய்க்கால் வளமும் கொண்ட
பண்டாரியாவெளி தனிலே
கதிர்காமப்போடிக்கு வந்துதித்த மாணிக்கப்போடி ஐயாவே!

வட்டவிதானையாய் வலம் வந்த நீங்கள்
அரசையூர் மகளை கரம் பிடித்து
பார்போற்றும் மட்கட் செல்வங்களையும் ஈன்றாய்
பாரினிலே சீர்பெற்று வாழ்ந்தாய்

சமூக சேவகனாய் தரணியிலே
பவனி வந்தாய் மாணிக்கப்போடி ஐயா – நீங்கள்
பல்லாண்டு வாழ்ந்து
தடம் பதித்தாய் சாதனைகளை

வையகத்தே உன் சேவை போதுமென்று
வானகத்தே சேவை செய்ய
அழைப்போலை விடுத்தானோ ஈசனவன்
அமைதியாய் விடைபெற்றாய் எமை விட்டு

நிழல் கொடுக்கும் என்று எண்ணி – பிரார்த்திக்கின்றோம்
உன் ஆத்மா சாந்தி வேண்டி
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மட்/கர்சேனை அ.சு.க.பாடசலைச் சமூகம்.

மு.பா கொமினிகேசன் யூனியன் வீதி அரசடித்தீவு-0770832981.0752336737

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்பத்தின் அகல் விளக்காய் ஒளிர்ந்து எம்மை
வளர்த்து நிமிர்த்தி ஆளாக்கி விட்டு விட்டு
இன்று மீளாத்துயிலில் கொண்டிருக்கும் எங்கள்
அன்புத் தந்தை
அமரர்

**கதிராமப்போடி மாணிக்கப்போடி**

அவர்களின்
பிரிவு செய்தி கேட்டு உடன் பல வழிகளிலும்
உதவியவர்கள் ஆறுதல் படுத்தியவர்கள் அன்னாரின்
இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டவர்கள் தொலைபேசி,
தந்தி மூலம் எமது துயர்போக்க ஆறுதல் கூறியவர்கள்
பதாதைகள் துண்டுப்பிரசுரங்கள் மூலம் அஞ்சலி செலுத்தி
அனுதாபங்களை வெளிப்படுத்தியவர்கள் அவரின் நினைவுச் சுவடுகளை
உரை வடிவில் வெளிப்படுத்தியவர்கள், மரணக்கிரியைகளின் பின்பு
இடுத்து வந்த நாட்களில் இரவு பகல் பாராது எங்கள் இல்லம் நாடி சந்து
எம்துயர் போக்க தம் நலன் ஈர்ந்தவர்க[illegible] எங்கள்
அழைப்பை ஏற்று தம் வேலைச் சுமைகளைப் பொருட்படுத்தாது எமதகம்
வந்து எம் தந்தையின் ஆத்மா சாந்தி வேண்டி பிராத்தனைகளிலும்
ஈடுபட்டு ஆத்மா சாந்தி உரம் கொடுத்த உங்களுக்கும் மற்றும் அனைத்து
வழிகளிலும் உதவிய அன்பர்கள் நன்பர்கள் உற்றர் உறவினர்கள்
அனைவருக்கும் எமது உளம் நிறைந்து மிகவும் பணிவோடு நன்றிகளை
தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை வீதி
அரசடித்தீவு
0653645543

இவ்வண்ணம்
மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்

# வம்ச

கணபதிப்பிள்ளை + சின்னப்பிள்ளை

கதிராமப்போடி
தங்கப்பிள்ளை

பாலிப்போடி + நாகாத்தை

செம்பிப்பிள்ளை
கதிராமப்போடி
வள்ளியம்மை
பாலாத்தை
தாந்திப்பிள்ளை
சின்னப்பிள்ளை
மயிலிப்போடி
பிள்ளையம்மா

தம்பிப்போடி
கந்தப்போடி
**மாணிக்கப்போடி**
சிவசம்பு
ஜயாத்துரை

புவனசிங்கம்
+
மகேஸ்வரி

ரேணுகா
+
முகுந்தன்

மோனிசாகர்
திவ்வியசாகர்

லேகா

வரதராசா

பாலசுந்தரம்
+
சறோஜாதேவி

துசாந்தினி
டிவாகர்
சுவாசினி
வாகினி

# விருட்சம்

கதிராமப்போடி + கற்பகப்பிள்ளை

பாலிப்போடி + தங்கமுத்து

சத்திருக்கப்போடி

தங்கப்பிள்ளை

பொன்னம்மா

வள்ளியம்மா

கந்தசாமி

வைரமுத்து

சின்னத்தம்பி

தங்கராசா

**சௌபாக்கியம்**

கிருஸ்ணபிள்ளை

ஆனந்தபிள்ளை

நல்லம்மா

சிவசுப்பிரமணியம்

தங்கேஸ்வரி

பரமானந்தம்
+
அமிர்தமலர்

ஜெயகாந்தினி

கோகுலகாந்

ருவேஸ்காந்

வல்லிபுரம்
+
தங்கமலர்

சோபனராஜ்

வினோதினி

ரகுவதி

மகேஸ்வரி
+
மேகராஜா

கயாழினி

கிருசாந்

டோஜனா

தீர்க்கசாந்

02
65
37
6

23
86
88
3

# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை நீ இழந்தாய்? எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்? அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.
"இதுவே உலக நியதியும், எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

வணசிங்கா பிரிண்டர்ஸ், 126/1 திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.இல. 065-2227170